The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்" (அரு. 10 : 11-16).

புத்தகம் 18. | ஜூன் 1920. | இலக்கம் 6.

GROWTH OF THE INDIGENOUS CLERGY.

சுதேச குருக்களின் அபிவிருத்தி.

நமது பரிசுத்த பிதாவாகிய 15-ம் ஆசீர்வாதப்பரென்னும் பாப்பாசர் உலக முற்றிலும் நம்முடைய சத்திய வேதம் பரவவும், அது தழைத்தோங்கி வளரவும் அத்தியாவசியமான சாதனங்கள், வழிவகைகளாகியவைகளை எடுத்துக்காட்டி வரைந்துள்ள நிருபத்தை சென்றமாத "நல்ல ஆயன்" சஞ்சிகையில் பிரசுரித்தோம். அதை எமது சந்தாதாரர்கள் அனைவரும் கூர்ந்து வாசித்து, விஷயங்களை நன்கறிந்திருப்பார்களென நம்புகிறோம். அந்நிருபத்தில் பரிசுத்த தந்தையவர்கள், சுதேச குருக்களின் அபிவிருத்தியானது விசுவாசப் பரம்புதலுக்கு இன்றியமையாத சாதனமெனக் கூறியுள்ளார்கள். இவ்விஷயமாய் அவர் வரைந்திருப்பதாவது: "உள்ளபடி கத்தோலிக்குத் திருச்சபை எவ்வாறு எல்லோருக்கும் பொதுவானதாயும், எந்த ஜாதியாரையும் எல்லா வர்ணத்தாரையும் தழுவினதாயுமிருக்கின்றதோ, அவ்வாறே ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்களுக்குள்ளிருந்தே தங்களுக்குத் தேவ நீதிகளைக் கற்பிக்கும் போதகர்களாகவும், ஞானமேய்ப்பர்களாகவும் கொள்ளத்தக்க பரிசுத்த குருக்களை அடைதல்வேண்டும். ஆதலால், எங்கெங்கே தேவ அழைப்புக்கு யோக்கியதையுடையவர்களான சுதேச குருக்கள் பயிற்சியிலும் தொகையிலும் போதுமானபடி தேர்ந்து விளங்குகிறார்களோ அவ்விடங்களிலெல்லாம் அன்னிய போதக குருக்களின் வேலை திருப்திகரமாய் நிறைவேறிற்றென்று கருதப்படல் வேண்டும். அவ்விடங்களில் திருச்சபை ஸ்திரமாய் ஸ்தாபகமாயிற்றென்னலாம். மேலும் அங்கே ஒருகால் வேதகலாபனை கிளம்பி திருச்சபையை அழிக்க நேர்ந்தாலும் பகைவரின் தாக்குதலுக்கு அது அசையுமென்று அஞ்ச இடமிராதபடி அதன் வேர்களும் அஸ்திவாரங்களும் நன்றாயூன்றி உறுதிப்பட்டுப்போயிற்றென்று சொல்லலாம்" என்பதே. இதனால் அந்தந்த நாட்டிலும் அந்தந்த நாட்டாரே யோக்கியதையும் திறமையும் வாய்ந்த குருக்களாக்கப்பட்டு, தங்கள் தங்கள் சுயநாட்டாருடைய ஆத்தும இரட்சண்யத்துக்காக உழைத்தல் அநுகூலமானதென நன்கு விளங்குகின்றது.

பரிசுத்த தந்தையின் இந்த ஏவுதலுக்குக் கத்தோலிக்கு இந்தியர்களனைவரும் கட்டாயம் கவனஞ்செலுத்தல்வேண்டும். நம்

முடைய இந்தியர் தேசமோ அப்போஸ்தலர் காலந்தொட்டு இந்நாள்மட்டும் சத்திய வேதம் போதிக்கப்பட பாக்கியம்பெற்ற தேசமாயினும், அதன் 33 கோடி ஜனங்களுக்குள்ளே இன்னும் 32 கோடிக் கதிகமான பேர் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்துகிடக்கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் கிறீஸ்துநாதரின் நாமம் போதிக்கப்படவும், அவர் கொண்டுவந்த இரட்சண்யத்தில் இவர்களும் பங்கடையவும் தக்கதாக, இந்திய குருக்களின் தொகை அதிகரிக்கும்படி உதவி புரிவது இந்திய கிறீஸ்துவர்களமேல் சுமந்த கடமையாயிருக்கின்றது. தென்னிந்தியாவிலுள்ள சுதேச குருக்களின் தொகையைக் கணிக்கையில், அது மிக்க சொற்பமென சொல்லத்தேவையில்லை. எத்தனையோ கிறீஸ்துவ கிராமங்களில் நமது கத்தோலிக்குச் சகோதரர்கள் குருக்களில்லாமையால் கடன்பூசை காணாமல, அத்தியாவசியமான தேவத்திரவிய அநுமானங்களைப் பெறாமல் சுத்த அஞ்ஞானிகளைப்போல் சீவிக்கவேண்டியதாயிருக்கிறது. எத்தனையோ கிராம வாசிகள் பூசைகாண காததூரம் நடக்கவேண்டியதாயிருக்கிறது. இத்தகைய அசௌகரியங்கள் சங்கடங்களுக்குக் காரணம் போதுமான குருக்களில்லாத குறையேயல்லவோ? இப்போதிருக்கிற குருக்களுங்கூட இந்தியர்களின் சுயமுயற்சியாலல்ல, அன்னியருடைய பரோபகாரச் செயலால் உண்டானவர்கள் என்பதற்குச் சாட்சியம் வேண்டுவதில்லை. மலையாள நாட்டுக் குருக்களின் தொகையைத் தவிர்த்து மிகுதியாயுள்ள சுதேச குருக்களின் உற்பத்தி, படிப்பு, சவாட்சணை முதலியவைகளைக் கவனிக்குங்கால், இவையாவும் அன்னிய போதக சபைக் குருக்கள் முயற்சியாலும் பிரயாசையாலும் கிடைக்கப்பெற்றனவென்பதை யார் மறுப்பார்? தென்னிந்திய கத்தோலிக்கர் இவ்விஷயத்தில் இவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளார். சுதேச குருக்களின் படிப்பு, சவாட்சணை முதலியவைகளுக்கு அன்னிய போதக சபைக் குருக்கள தங்கள் சுயதேசங்களிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், விசுவாசப் பரம்புதல் சபையாரிடமிருந்தும் இதுவரையிலும் பெற்றுவந்த பொருளுதவி இனி கிடைப்பது துர்லபமாகிவிட்டது. சமீபத்தில் நடந்து முடிவடைந்த ஐரோப்பிய மகா யுத்தத்தினால் அவ்வுதவி பெரும்பாலும் அல்லது முற்றுமே அற்றுப்போயிற்று. ஆனதுபற்றி, இந்திய கத்தோலிக்கர் இனிமேலாவது தங்கள் சுயதேச குருக்களின் தொகை அபிவிருத்தி அடைவதற்கான உதவி புரிவது அவசியமாகின்றதன்றோ?

பரிசுத்த தந்தையவர்கள் சுதேச குருக்களின் அபிவிருத்திக்காக கற்பித்திருப்பதாவது: “ஒவ்வொரு தேசத்திலும் பல மேற்றிராசனங்களுக்கு அநுகூலமாயிருக்க குருமடங்களை ஸ்தாபிக்கும்படி, அல்லது ஸ்தாபகத்துக்கான வழிவகைகளைத் தேடும்படி, அல்லது அம்மடங்கள் சரிவர நடக்கின்றனவாவென்று கவனிக்கும்படி விசுவாசப் பரம்புதல் சபையாருக்கு ஆக்ஞாபிக்கின்றோம். விசேஷமாய் விக்காரியட்களிலும், இன்னும் மற்ற மிஷன்களிலும் புதிதாய் சுதேச குருக்கள் ஏற்பட்டுத் தழைத்தோங்குவதைச் சர்வ ஜாக்கிரதையாய்க் கவனித்துவரும்படி அச்சபையாரை ஏவுகிறோம்” என்பதாம். பரிசுத்த தந்தையின் இவ்வேவுதலுக்கும் விருப்பத்துக்கும் இணங்க கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் முன்வருவார்களாக. முன்வந்து, தத்தம் மேற்றிராசனங்களில் புதிதாய்க் குருமடங்கள் ஸ்தாபிக்கப்படவும், அல்லது ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மடங்கள் யாதோர் இடையூறின்றி நன்கு நடைபெற்று விருத்தியடையவும் மேற்றிராணிமார்களுக்குப பக்கததுணையாயிருந்து தங்களாலான உதவியெல்லாஞ் செய்தல்வேண்டும். இதன்பொருட்டு அவரவர்களும் தங்தங்களாலியன்ற பொருளுதவி செய்வதுமல்லாமல், குருத்துவத்துக்கு யோக்கியதையாயுள்ள தங்களுடைய மக்களை யாதோர் கலக்கமின்றி மனமுவந்து ஆண்டவருடைய திராக்ஷத்தோட்டத்தில் வேலை செய்ய விட்டுவிடவும்வேண்டியது. மேலும், அத்தகைய குணம், யோக்கியதை, தேவ அழைப்பு முதலிய அநுகுணமான குறிகள் காணப்படும் வேறு யௌவனர்களுக்கும், அவர்கள் பெற்றோர்களுக்கும் தக்கபடி போதித்து, அச்சிறுவர்களை பரிபக்குவப்படுத்தி, குருத்துவ பதவியை நாடும்படிச்செய்தலும் மகா சகிர்த புண்ணியமாகும். உயர்தர உலக கல்விக்குத் திறமையுள்ள தங்கள் பிள்ளைகளைக் கடன்பட்டாகிலும் படிக்கவைப்பதுபோல், குருப்பட்டத்துக் கருகான தங்கள் மக்களையும்

அவ்வுந்நத பட்டத்துக்கு யோக்கியதையான பயிற்சியையும், படிப்பையும் பெறச்செய்யத் தாராளமாய்ச் செலவுசெய்யவேண்டியது. இதுசாறும் இவ்வாறு பணச்செலவும் பரித்தியாகமும் செய்த பெற்றோர் எத்தனை பேர்! ஐயோ! சில பெற்றோர் தங்கள் மக்களுக்குள்ள தேவ அழைப்பை அறிவார்களானால், அதற்கு சனுகாயிருந்து, அவர்களை உற்சாகப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய உதவி புரிவதற்கு மாறாக, அவர்களுக்கு இடையூறாயிருந்து அவர்கள் குருப் பதவிக்குச் செல்லும் மார்க்கத்தில் என்னென்ன தடைகளைப் போடலாமோ அவைகளையெல்லாம் போட்டுத் தடங்கல் செய்துவிடுகிறார்கள். இப்படிச் செய்பவர்கள் சர்வேசுரனுடைய கோபத்தையும் சாபத்தையும் வருவித்துக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

இனிமேலாவது இந்திய கிறீஸ்துவர்கள் தங்கள் சுயதேச குருக்களின் தொகை மேன்மேலும் அதிகரிக்கும் விஷயமாய்க் கவனஞ்செலுத்துவார்களெனக் கோருகிறோம். இவ் வதிகரிப்புக்குவேண்டிய குரு மடங்கள் இல்லாமற்போகவில்லை. தற்காலத்துக்குப் போதுமான மடங்களுண்டு. ஆனால் அவைகளின் பரிபாலனத்துக்கான உதவி செய்வோரையும், அவைகளில் வாசித்துப் பலனடைய மாணாக்கரையுந்தான் காணோம். பணமென்றால் சினங்கொண்டு பின்வாங்குவோர் எத்தனையோ பெயர்!! எங்களுக்கு அந்த நன்மை செய்வாரில்லை, இந்த நன்மை செய்வாரில்லை என்று பிறர்மேல் குறைகூறவோ அவர்கள் வாய் கூசுவதுமில்லை. அதை அப்படிச்செய்யவேண்டும், இதை இப்படிச் செய்யவேண்டுமென்று வாய்த்தாராளமாய்ப் பேசி, பேச்சால் கோட்டைகட்டவும் அவர்கள் சலியார். இப்படியெல்லாம் பேசுவதில் என்ன பயன்? தன் முயற்சியால் ஏதேனும் செய்ய முற்பட்டாலன்றோ பிரயோஜனம் பெறலாம்? ஆகையால் எல்லாப் புண்ணியங்களிலும் சிறந்த புண்ணியமாகிய ஆத்தும இரட்சண்ணியத்தின்மேல் ஆசைகொண்ட புருஷ பூவையர் எல்லோரும் ஏகோபித்து ஒவ்வொருவரும் தம்தம்மாலியன்ற உதவி புரிந்து சுதேச குருக்கள் பெருக்கமடையச் செய்வது புத்தியும் யுக்தியுமாகும்.

இலங்கையிலுள்ள கண்டிமாநகரின்கண் ஸ்தாபகமாயிருக்கும் பாப்பானவரின் குரு மடத்தைப்பற்றிய 'வியாசமொன்றும்'' அம்மடத்துக்காக நாம் செய்துகொண்ட விண்ணப்பமொன்றும் சென்ற அக்டோபர் மாத ஆயனில் வெளியிட்டோம். அவ்விண்ணப்பத்தில் அம்மடத்துக்கு நேரிட்டிருக்குங் குறைகளையும், அசௌகரியங்களையும் எடுத்துக்கூறி, அதன் வித்தியார்த்திகளுடைய பிரயோஜனத்துக்காக அஸ்திவாரமிடப்பட்டு இன்னுங் கட்டி முடியாமல் தடைப்பட்டிருக்கும் தேவாலயத்துக்குச் சிறிது பொருளுதவி செய்து, தங்களுடைய வேதாபிமானத்தையும், தேசாபிமானத்தையுங் காட்ட நமது சந்தாதாரர்களைக் கேட்டுக்கொண்டது அவர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த எமது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து எம்மை சன்மானித்தவர்கள் இருவரே யாவர். இவர்களிடமிருந்து வசூலான தொகை ரூ 1—8—0. இவர்களுடைய முன்மாதிரிகையையாவது ஏனைய சந்தாதாரரும் பின்பற்றி நபருக்கு அணா எட்டாகிலும் கொடுத்துதவுவார்களானால் ரூ 1,000 சேர்ந்துவிடும். இத்தொகையையே நாமும் எமது சந்தாதாரரிடத்தில் எதிர்பார்த்திருந்தோம். ஆனபடியால், மீளவும் சுதேச குருக்களின் அபிவிருத்தி விஷயமாய் எமது சந்தாதாரருடைய வேதாபிமானத்தையும், தேசாபிமானத்தையும் எதிர்நோக்கி, ஷை விண்ணப்பத்தைப் புதிப்பித்துக்கொள்ளுகிறோம். இம்முறையாவது எம் நண்பர்கள், ஷை அதி யுத்தம கைங்கரியத்துக்காக, தம்மாலியன்றவரையில் பொருளுதவி செய்வார்களென நம்புகிறோம். பல துளி பெருவெள்ளமாவதைக் கருதி, எவ்வளவு சிறிய தொகையாயினும் வந்தனத்துடன் வரவேற்கப்படும். ஆனால் ஒவ்வொருவரும் இல்லையென்னாமல் கிஞ்சித்தாகிலும் கொடுப்பார்களாக. கொடையாளர்களைக் கடவுள் கடாட்சிப்பாராக!

தன்னைத்தா னறியாத மூடரெல்லாந் தானுலகிற்
குருக்களென்று பெயருஞ் சொல்வார்
பின்னைத்தான் பிறவாத நெறியுங் காணார்
பேசாத மந்திரத்தின் பெருமை காணார்
முன்னைத்தான் பெரியோர்கள் சொன்ன நூலின்
முறைமையறியாதார் வீண்மூட ரெல்லாம்
என்னத்தாற் சீஷனுக்கு முத்தி காட்டி
ஈடேற்றங் கொடுப்பதுவு மியல் பிலாரே.

—(அகஸ்தியர் விருத்தம்).

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XIII
அபிகாயில்.

"இதோ உம்முடைய அடியாளாயிருக்கிறேன். என் ஆண்டவனுடைய ஊழியர்களின் கால்களைக் கழுவத்தக்கப் பணிவிடைக்காரியாயிருக்கிறேன்" (1 அரசர். 25, 41).

இஸ்ராயேலர்க்கு அரசனாயிருந்த சாவுல் சர்வேஸ்வரனுக்குக் கீழ்ப்படியவில்லை. ஆண்டவர் அவனை நீக்கிவிட்டு அவனுக்குப் பதிலாகத் தாவீதை நியமித்தார். இதனால் சாவுலுக்குத் தாவீதின்மேல் வருத்தமும் பகையும் உண்டாயிற்று. சாவுல் தாவீதைத் தொலைத்துவிட—கொன்றுபோட—முயன்றுவந்தான். அவனது கோப வாளுக்குக் கிட்டுப்படாதிருக்கத் தாவீது இடம் விட்டு இடம் மாற நேர்ந்தது. ஒரு நாள் பாரான் வனாந்தரத்திலிறங்கினான். அதற்குப் பக்கத்தில் மாகோன் வனாந்தரமிருந்தது. அதில் நாபால் எனுமோர் மனிதன் வாசஞ்செய்தனன். அவன் ஐஸ்வரியவான். அவனுக்கு மூவாயிரம் ஆடுகளும் ஆயிரம் வெள்ளாடுகளும் இருந்தன. அவனது காணியாட்சிக் கர்மேலிலிருந்தது. அவ்விடத்தில் தனது மந்தைக்கு மயிர் கத்தரித்துக்கொண்டிருந்தான். அவன் ஓர் கபடன். கொடியனுந் துஷ்டனுமாகக் கொள்ளப்பட்டான். அவனது மனைவியோ மிக்க சுந்திரவதி—மிக்க விமரிசையுள்ள ஸ்திரீ.

நாபால் தனது மந்தைக்கு மயிர் கத்தரிக்குஞ் செய்தியைக் கேட்டமாத்திரத்தில் தாவீது பத்து வாலிபர்களை அழைத்து "நீங்கள் கர்மேலிலேறி நாபாலிடஞ் சென்று என்பேரால் அவனுக்குச் சமாதான வந்தனஞ்செய்து, அவனை நோக்கி: என் சகோதரர்களுக்கும், உமக்கும் உமது வீட்டுக்கும் உமக்கிருக்கிறவைகளெல்லாத்துக்குஞ் சமாதானமுண்டாவதாக. எங்களுடன் வனாந்தரத்திலிருந்த உமது மேய்ப்பர் ஆடுகளை மயிர் கத்தரிக்கிறார்களென்று அறியவந்தேன். ஆயினும் நாங்கள் அவர்களை ஒருபோதும் வருத்தப்படுத்தவில்லை. கர்மேலில் அவர்களிருந்த காலமெல்லாம் அவர்களுடைய மந்தையில் ஓர் ஆடுகூடக் காணாமற்போனதில்லை. உம்முடைய வேலைக்காரர்களைக் கேட்டால் உமக்குச் சொல்வார்கள். ஆதலால் இந்த உம்முடைய அடியார்களுக்கு உமது கண்களில் தயை கிடைக்கவேண்டும். உமது கையில் எது அகப்படுமோ அதை உமதடியார்களுக்கும் உமது குமாரன் தாவீதுக்குங் கொடுமென்று சொல்வீர்கள்" என்று சொல்லியனுப்பினான். எஜமானனின் ஆக்ஞாபனைப் பிரகாரம் ஊழியர்கள் சென்று நாபாலைக்கண்டு அவ்வார்த்தைகளைச் செப்பினர். ஆனால் நாபாலோ தம் முன்னிற்போரை நோக்கி "தாவீதென்பவன் யார்? இஸாய் குமாரன் எவன்? என்னுடைய அப்பங்களையும் தண்ணீரையும் ஆடுகளை மயிர் கத்தரித்தவர்களுக்காக நானடித்துச் சமையல் பண்ணுவித்ததையும் எடுத்து எங்கிருந்தோ வந்தவர்களென்று நானறியாத மனுஷர்களுக்குக் கொடுப்பேனோ?" என்று மறுமொழி பகர்ந்தான்.

தாவீதின் ஊழியர்கள் உடனே திரும்பி வந்து நாபால் செப்பியவற்றை அரைகுறையின்றிச் சொன்னார். அப்போது தாவீது தன் மனிதர்களை நோக்கி "நீங்கள் ஒவ்வொருவனும் தத்தம் பட்டயங்களைக் கட்டிக்கொள்ளுங்கள்" என்றான். அப்படியே செய்தனர். தாவீதும் தன் பட்டயத்தை யணிந்துகொண்டான். ஆகவே நானூறு பேர் பின்பற்றத் தாவீது நாபாலை எதிர்க்கப்போனான். அச்சமயம் நாபாலின் வேலைக்காரர்களில் ஒருவன், தனது எஜமானனின் மனைவியாம் அபியாலிடஞ்சென்று சொன்னதாவது:—"இதோ நம் எஜமானனுக்கு உபசரணை சொல்ல தாவீது வனாந்தரத்திலிருந்து தூதர்களை யனுப்பியிருக்க, அவர்கள்மேல் அவர் கோபித்துக்கொண்டாரே. அவர்களோ எங்களுக்குக் கூடியமட்டும் நல்லவர்களாயிருந்தார்கள். எங்களுக்குத் தொந்தரவு செய்ததுமில்லை. நாங்கள் அவர்களோடு நடமாடினகாலமெல்லாம் நமது பொருளில் ஒன்றுங் காணாமற்போனதுமில்லை. நாங்கள் ஆடுகளை மேய்த்து அவர்களிடத்தில் நடமாடின நாட்களிலெல்லாம் அவர்கள் இராவிலுஞ்சரி பகலிலுஞ்சரி எங்களுக்குச் சுவர்போலிருந்தார்கள். ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றி நீர் செய்யவேண்டியதென்னவென்பதை யோசித்துக் கவனித்துப்பாரும். ஏனெனில் உமது புருஷன்பேரிலும் உமது வீட்டின்பேரிலுந் துன்பம் விளையும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" என்றனர். இதைக் கேட்டு அபிகாயில் தீவிரித்து இருநூறு அப்பங்களையும், இரண்டு பாத்திர இரசத்தையுஞ் சமைக்கப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்து படி வறுத்த பயற்றையும், மாவையும், நூறு உலர்ந்த திராட்சைப்பழங்களையும் வற்றலான இருநூறு கூடை அத்திப்பழங்களையும் எடுத்துக்கொண்டு கழுதையின்மேல் எற்றித் தன் வேலைக்காரர்களைப் பார்த்து "நீங்கள் எனக்குமுன்னே போங்கள், இதோ நான்

உங்கள் பின்னால் வருகிறேன்" என்று அனுப்பினாள். அவள் கழுதையின்மேலேறி மலையடிவாரத்தில் இறங்கிவரும்போது, இதோ! தாவீதும் அவனுடைய மனிதர்களுந் தனக்கெதிரேவரக் கண்டு அவர்களுக்கெதிரில் நின்றாள். தாவீதைப் பார்த்தவுடனே கழுதையினின்று இறங்கி அவன்முன் முகங் குப்புறவிழுந்து தரைமட்டுங் குனிந்து நமஸ்காரம்பண்ணினாள். பிறகு அவன் காலில் விழுந்து என்னாண்டவனே! அந்தத் துரோகம் என்மேலிருக்கட்டும். உமதடியாள் சொல்லப்போகிறதை நீர் காதினாலே கேட்க வேண்டுமென்று உம்மைக் கோருகிறேன். என் அரசனாகிய ஆண்டவனே! நீர் அந்தக் கெட்ட மனிதனாகிய நாபால்பேரில் மனவருத்தப்பட வேண்டாம். ஏனெனில் அவனுடைய பெயரின் அர்த்தப்பிரகாரம் அவன் ஓர் பேதை. அவனுக்குப் பித்தமுமுண்டு. என்னாண்டவனே! உமதடியாளாகிய நான் நீர் அனுப்பின உமது ஊழியர்களைக் கண்டதில்லை. ஆதலால், இப்போது என்னாண்டவனாகிய உமக்கு உமதடியாள் கொண்டுவந்த வெகுமானத்தை நீர் ஏற்றுக் கொள்ளும். உம்மைப் பின்பற்றிவரும் உமது ஊழியர்களுக்கும் அதைக் கொடுக்க மன்றாடுகிறேன்" என்றாள் அபிகாயில். அப்போது தாவீது அபிகாயிலை நோக்கி "இன்று என் எதிராக உன்னை யனுப்பின இஸ்ராயேல் தேவனாகிய கர்த்தர் புகழப்படுவாராக! உன் வார்த்தைகளும் ஆசீர்வதிக்கப்படுவனவாக. நான் இரத்தஞ் சிந்தி பழிவாங்கத் தடைபண்ணிய நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக" எனச் சொன்னான்.

1. தாவீது ராஜா நாபால்மீது கொண்டுள்ள கோபத்தைத் தணிக்க சௌந்திரியமும் விவேகமுமுள்ள அபிகாயில் முன்வந்தாள். இவள் அர்ச். மரியாயிக்கு உவமானம். தாவீது சர்வேசுரனையும் நாபால் பாவியானவனையுங் குறிப்பிடுகிறார்கள். அப்படியானால் அபிகாயில் யாரைக் குறிப்பிடுகின்றனள்? இரக்கத்தின் தாயும் பாவிகளுக்காகப் பரிந்து பேசுபவளும் தனது பக்தியுள்ள மன்றாட்டால் தேவனின் கோபத்தைத் தீர்க்கவல்லவளுமாகிய அர்ச். மரியாயே மெய்யான அபிகாயில் என்பது பொய்யாகாது. இதுவே வேதவிர்ப்பனராம் பெல்லார்மின் என்பவரின் அபிப்பிராயம்.

நாபால்பேரிலும் அவன் வீட்டின்பேரிலுந் துன்பம் வரக்கூடுமாயிருந்தது. அதைப்போல் பாவியானவன்மேல் பெருந் தீங்கு விளையவிருந்தது. ஆகவே, ஆண்டவர்போல் சங்கீதாகமாசிரியர் அவனை எச்சரிக்கின்றார். "நீங்கள் மனந்திரும்பாதேபோனால் அவர் தமது பட்டயத்தைக் கருக்காக்குவார். வில்லையும் நாணேற்றி அதை ஆயத்தப்படுத்தி அதற்காக மரண ஆயுதங்களை முஸ்திப்புச்செய்கின்றனர்" (சங். 4, 12). அபிகாயிலைப்போல் எத்தனை விசையோ கன்னிமரியாய்ப் பாவியின்மேல் வரக்கூடிய கோபாக்கினையை நீக்கியுளர். ஆரோன் என்னும் அதிசிரேஷ்ட குருவின் மன்றாட்டைத் தேவன் கேட்டருளினாரென்பதற்குப் பின்வருவது அத்தாட்சி. "அவன் பாவிக்காக மன்றாடுவதையுங் கேட்டு அவர்களைக் கோபாக்கினைக்குள்ளாகாதபடி தடுத்தும், அவனைத் தண்டிப்பது அவசியமாயிருந்துந் தண்டியாமல் விடும்படி செய்தார்."

அர்ச். பொனவெந்தூரா இவ்வுவமானத்தைப் பின்வருமாறு வியாக்கியானிக்கின்றார் 'ஆசீர்வதிகப்பட்டவள்' என்று நாம் கன்னிமரியாயை யழைப்பது மிக்கச் சரியே. ஏனெனில் அவள் நிமித்தமன்றோ கடவுள் மனிதன்மட்டில் இரக்கங் கொள்கின்றார். அபிகாயின் சரித்திரம் இதை நன்கு விளக்கும். தாவீது கொடியோனான நாபால்மீது கொபங்கொண்டுள்ளான். அதன் நிமித்தம் அவனைக் கொல்லவுந் துணிந்தான். அச்சமயம் அபிகாயில் தாவீதைப்போய்ச் சந்தித்து மன்னிப்புக்கேட்டாள். தாவீதின் கோபம் அதனால் தணிக்கப்படவே அவளை நோக்கிச் சொல்வான்: "உன் வார்த்தைகள் ஆசீர்வதிக்கப்படுவனவாக! நான் இரத்தஞ் சிந்தி பழிவாங்கத் தடைபண்ணிய நீயும் ஆசீர்வதிக்கப்படுவாயாக. மூடன் என்று பொருள்படக்கூடிய நாபால் என்பவன் பாவிக்குச் சமானம். ஏனெனில் எல்லா பாவிகளும் ஓர் விதத்தில் மூடரே. 'அந்தோ! புத்தியில்லாதவர்களை எண்ணவுமுடியாதே'" (சங்கப்ர. 1, 15). அபிகாயில் கன்னிமரியாய்க்குச் சமானம். அவள் பெயரின் பொருள் 'பிதாவின் ஆனந்த'மெனப்படும். மெய்யாகவே அர்ச். மரியாய் பரமபிதாவின் ஆனந்தமாம். அவர் மரியாயினிடத்தும், மரியாய் அவரிடத்தும் அக்களிப்படைந்துள்ளார். ஆகவே, மரியாய் "என் இரட்சண்யமாகிய சர்வேஸ்வரனிடத்தில் என் ஆத்துமம் ஆனந்தமாய் எழும்பி மனமகிழ்கின்றது" என்று பாடினாள்.

2. அபிகாயில் கன்னிமரியாயைக் குறிப்பிடுகின்றாப்போல் தாவீது சேசுநாதரைக் குறிப்பிடுகின்றார். துஷ்ட நாபால்மட்டில் தாவீதுக்குக் கோபமுண்டானது. பாவிகள்பேரிலும் கடவுளுக்குக் கோபமுண்டு. அபிகாயிலின்மூலமாய்த் தாவீதின் கோபம் தணிக்கப்பட்டது. கன்னிமரியாயின் நிமித்தம் கடவுள் பாவிகள்பால் இரக்கங்காட்டுகின்றார். அபிகாயிலின் அமிர்தமொழிகளும் பிரிய வெகுமதிகளுந் தாவீதின் இருதயத்தைக் குளிரச்செய்தன. மரியாயின் பக்தியுள்ள மன்றாட்டும் அபரிமிதமான பேறுபலன்களும் அவரது திவ்ய குமாரனின் இருதயத்தை அவளது சித்தம்போல் இணங்கச்செய்கின்றன. அபிகாயில் அநித்திய தண்டனையைத் தடுத்தாள். மரியாயோ நித்திய தண்டனையினின்று பாவி

யைக் காப்பாற்றுகிறாள். அபிகாயில் வாளை யுறையினின்று வெளியெடுக்காது தடுத்தாள். மரியாயோ தேவ கரங்களையே சாபம் போடாதபடிக்குத் தடுக்கின்றாள். ஆகவே, “ஓ! ஆண்டவளே! உம்மையன்றி வேறு யாருந் தேவதண்டனையைத் தடுக்க வல்லவளல்ல. ஆண்டவரிடமிருந்து முதல்முதல் இரக்கமடைந்தது உம்மாலன்றோ? நீரன்றோ அவருக்கு மிக்க உகந்தவர்” என அர்ச். பெர்னார்து புகழ்கின்றார். அபிகாயில் செய்ததைவிட கன்னிமரியாய் தனது மன்றாட்டால் அதிகமாய்ச் செய்கின்றனள். அபிகாயில் தாவீதின் கோபத்தைத் தடுத்தாளேயொழிய நாபாலைச் சினேகிக்கச்செய்யவில்லை. ஆனால் பரிசுத்த மரியாயோ பாவியின்மீது கடவுளுக்குள்ள கோபத்தைத் தணிக்கிறதுமன்றி தம் மூலமாய் அவர்களைக் கடவுளுக்குப் பிரியமுள்ளவர்களாயுமாக்குகின்றனள்.

3. இன்னுமொரு விதத்தில் அபிகாயில் கன்னிமரியாயிக்குச் சமானம். தாவீது இராஜாவின்முன் தன்னைத் தாழ்த்தி ‘ஆண்டவனே உமதடியாள்’ என்று அபிகாயில் சொன்னாள். மரியாய்—ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளாயிருந்தும் தன்னைத்தானே தாழ்த்தி ‘இதோ! ஆண்டவருடைய அடிமையானவள்’ என்று சம்மனசானவர் முன்னிலையிற் செப்பினாள். இதையிட்டு அர்ச். பொனவெந்தூரா அடியிற்கண்டபிரகாரஞ் சொல்கின்றார்:—“மரியாயின் அதியாச்சரியத்துக்குரிய தாழ்ச்சியே! அவள் ஆண்டவருடைய அடிமையாகமாத்திரமல்ல—ஆண்டவருடைய ஊழியர்களின் அடிமையாகவுமிருக்கின்றாள். அபிகாயில் இது விஷயத்தில் மரியாயை நன்கு குறிப்பிடுகின்றாள். தாவீது தூதர்களையனுப்பி அபிகாயிலைத் தன்னில்லம் வரும்படியழைத்தபோது “இதோ! ஆண்டவனுடைய அடியாள், என் ஆண்டவனுடைய ஊழியர்களின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாயிருக்கின்றேன்” என்றாள். பரிசுத்த மரியாயின்வழியாய் பாவிகள் மனந்திரும்பும்போது—நல்வழிப்படும்போது—அவள் அவர்களின் பாதங்களை கழுவுகின்றனளென்கலாம். பாவிகளுக்கு மனஸ்தாபக்கண்ணீரைக் கொடுக்கையில் அவர்களின் பாதங்களைக் கழுவத் தண்ணீர் சேகரிக்கின்றாள் என்பது மிகையாகாது. “நாபால் மீது தாவீதுக்குள்ள கோபத்தை தனது விவேகமுள்ள சூட்சத்தாலும் வெகுமதிகளாலும் தணித்த ஞான அபிகாயிலே! புண்ணிய மரியே! நீர் பரமபிதாவின் ஏக குமாரனை உபசரித்தீர். அவர் உமது வார்த்தையைத் தட்டார். ஆகையால் பாவிகள்மேல் வரக்கூடிய கோபத்தைத் தடுத்து இரட்சிப்பீராக!” என்று கன்னிமரியாயை நோக்கி அர்ச். பொனவெந்தூராவோடு பிரார்த்திப்போமாக! (இன்னும் வரும்.) **M. S. M.**

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

3-ம் அதிகாரம்; வசனம்—23-38.

(முன் தொடர்ச்சி.)

யேசுநாதர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றபோது அவருக்குப் பிராயம் ஏறக்குறைய முப்பதாம். இதுவே நடுத்தரமான புருஷனுக்குரிய பிராயமாம். இப்பிராயத்தில் ஆண்டவர் வேதம் போதிக்கும் தமது பகிரங்க வேலையைத் துடங்குகிறார்.

பாலப்பருவத்திலும், வாலிபப்பிராயத்திலும் தான் குருவென்றும் ஆசிரியனென்றும் வேதம் போதிக்க ஒருவன் முன்வருவானாகில், அவனை ஜனங்கள் பெரிதும் சன்மானிக்கமாட்டார்கள். மேலும் எபிரேயரின் வழக்கத்தின்பிரகாரம் முப்பது பிராயத்துக்குக் குறைந்தவர்கள் உபாத்திமை வேலையைப் பகிரங்கமாய்ச் செய்வது கிடையாது. யாக்கோபுவின் குமாரனாகிய ஜோசேப்பு என்பவர் தனது 30-ம் பிராயத்தில் எஜிப்து இராச்சியத்துக்கு அதிபதியாக ஏற்படுத்தப்பட்டார். தாவீது இராசாவும் தனது 30-ம் பிராயத்தில் செங்கோல் செலுத்தத் துவக்கினார். எசெக்கியேல் தீர்க்கதரிசியும் தனக்கு 30-ம் பிராயம் நடக்கும்போதுதான் பலபல ஆச்சரியமான தேவ காட்சிகளைக் கண்டு யூதர்களுக்கு உபதேசம்பண்ணினார். அதனால்தான் நமதாண்டவர் நடுத்தரமான இவ்வுத்தம பிராயத்தில் ஜனங்களுக்கு உபதேசம்பண்ண வெளியேறுகிறார்.

யாத்திராகமத்தில் மோயீசன் தான் தேவனுடைய ஸ்தானாதிபதியாக பரவோனுக்கு முன்பாகப்போய் அவன் அடிமைத்தனத்தில் வைத்திருந்த தேவ பிரசையாகிய இஸ்ராயேலரை மீட்டுக்கொள்ள அனுப்பப்பட்ட வர்த்தமானத்திற்குப்பிறகுதான் அவருடைய வமிச அட்டவணை விவரிக்கப்படுகின்றது.

அவ்வாறே சேசுநாதர் தாம் பரலோக அத்தாட்சிகளால் தேவ குமாரனென்றும், மெஸ்ஸியாஸ் என்றும் வெளிப்படுத்தப்பட்டு மனுமக்களின் இரட்சண்ய வேலையை ஆரம்பிக்கும் வர்த்தமானத்தைக் கூறியபின் லூக்காஸ் சுவிசேஷகர் அவருடைய வமிச அட்டவணையை எழுதுகிறார்.

மத்தேயுஸ் சுவிசேஷகரும் சேசுநாதருடைய வமிச வழியை விவரித்து எழுதுகிறார். ஆனால் அவர் யூதர்களுக்காக முக்கியமாய் தமது சுவிசேஷத்தை எழுதினபடியால், யூதர்களுடைய பிதாவாகிய அபிரகாமிலிருந்து படிப்படியாய் சேசுநாதர்வரையில் வமிச கிளைகளைப் பிரித்துக் காண்பிக்கிறார். சேசுநாதர் யூதர்களுக்குமாத்திரமல்ல, சகல மனிதர்களுக்கும் சொந்தமானவர் என்றும், மனுக்குலத்தின் இரட்சகராயிருக்கிறார் என்றும் காண்பிக்கிறதற்காக லூக்காஸ் ஆண்டவருடைய வமிச அட்டவணையை ஆதாம் வரையில் கணக்கிடுகிறார்.

சேசுநாதருடைய வமிச வரலாற்றைக் கூறியபின் அவர் நாற்பது நாள் உபவாசமாயிருந்து பசாசினால் சோதிக்கப்பட்ட வர்த்தமானத்தை லூக்காஸ் எழுதுகிறார், அவர் எழுதிய சுவிசேஷ வசனங்கள் பின்வருமாறு:—4-ம் அதிகாரம்; வசனம்—1–13. "சேசுநாதர் இஸ்பிரீத்துசாந்துவினால் நிறைந்தவராய் யோர்தான் நதியைவிட்டுத் திரும்பி, இஸ்பிரீத்துவினால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே நாற்பது நாளிருந்து பசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாமலிருந்தார். பின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது, பசாசு அவரைப் பார்த்து நீர் தேவசுதனாகில், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றது. சேசுநாதர் அதற்கு மாறுத்தாரமாக மனிதன் அப்பத்தினால்மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய எந்த வார்த்தையினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது என்றார். பின்பு பசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், ஒரு க்ஷணப்பொழுதிலே உலக இராச்சியங்களையெல்லாம் அவருக்குக் காண்பித்து, இவைகளின்மேல் சர்வ அதிகாரத்தையும், இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன். ஏனெனில், இவைகள் எனக்குக் கையளிக்கப்பட்டிருக்கின்றன! எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். ஆதலால் நீர் என் முன்பாக விழுந்து நமஸ்கரித்தால் இவையெல்லாம் உம்முடையதாயிருக்கும் என்றது.

அதற்கு சேசுநாதர் மாறுத்தாரமாக உன் தேவனாகிய ஆண்டவரை நமஸ்கரித்து, அவர் ஒருவரையே சேவிப்பாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். மீளவும் பசாசு அவரை எருசலேம் நகருக்குக் கொண்டுபோய், தேவாலயத்தின் சிகரத்தின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவ சுதனானால் இங்கிருந்து கீழே குதியும், ஏனெனில் உம்மைக் காப்பாற்றும்பொருட்டு அவர் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிட்டிருக்கிறார் என்றும், உமது பாதம் ஒரு வேளை கல்லில் மோதாதபடிக்கு அவர்கள் தங்கள் கரங்களிலே உம்மை ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதப்பட்டிருக்கிறது என்றது. சேசுநாதர் அதற்கு பிரத்தியுத்தாரமாக: உன் தேவனாகிய ஆண்டவரைச் சோதியாதிருப்பாயாக என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்றார். அன்றியும் சோதனையெல்லாம் முடிந்தபின்பு பசாசு சில காலத்துக்கு அவரைவிட்டு அகன்றுபோய்விட்டது."

பழய ஏற்பாட்டின் மத்தியஸ்தராகிய மோசேஸ் என்பவர் பத்துக் கற்பனைகளையும் மற்ற வேதப் பிரமாணங்களையும் இஸ்ராயேல் பிரசைக்கு அறிவிக்குமுன், வனவாசத்திலும் உபவாசத்திலும் நாற்பது நாள் அமர்ந்து, சர்வேசுரனோடு சல்லாபித்துவந்ததுபோல், புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தரும் கர்த்தருமாகிய சேசுக்கிறீஸ்துநாதரும் தமது திவ்ய வேதத்தைப் போதிக்கிறதற்குமுன் நாற்பது நாள் தபம் செய்து பசாசோடு மல்லாடி, வெற்றி மகிமை அடைவது தேவ சித்தமாயிருந்தது. சேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றதும், இஸ்பிரீத்துசாந்துவின் அருட் சம்பூரணத்தால் நிரப்பப்பட்டு, அவர் மனம்பூரிக்க தேவ மகிமையே அவருடைய மனுஷீகத்தில் துலங்க, இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். இவ்வனாந்தரத்தின் பெயர் "குவாரண்டானா" சதுரிகைக் குன்று. இது ஜெரிக்கோபட்டணத்துக்கு மேற்கேயுள்ளது. இங்கே மலைகள் சுமார் 1,600 அடிமட்டும் செங்குத்தாய், கரடுமுரடாய் உயர்ந்து நிற்கும். பயிர் பச்சை, சோலைகள் தோப்புக

ளின்றி, மலைகளும் குன்றுகளும், ஆழமான பள்ளத்தாக்குகள், கணவாய்கள், கெபிகள் குகைகளும் நிறையப்பெற்று, காய்ந்து வரண்ட இவ்வனாந்தரம் மிகவும் பயங்கரமாயும் கடுந்தபம் செய்ய ஏற்றதாயும் இருந்தது. இவ்விடத்தில் காட்டு மிருகங்கள், சிவிங்கி, கழுதைப்புலி, சிறுத்தை, கரடி எதேஷ்டமாய் ஆடி, ஓடி, அலைந்து திரியும். நமதாண்டவர் இக்காட்டில் வந்தபோது ஊதற்காற்று அகோரமாய் அடித்து, மழை பெய்யும் கடுமையான குளிர்காலமாயிருந்தது.

வேதாகமத்தில் நாற்பது என்னும் எண் தேவ செயல்களாற் பிரபல்லியம்பெற்றது. நோவே காலத்தில் நாற்பது நாள்வரையில் ஜலப்பிரளயமிருந்தது. நாற்பது நாள் மோசேஸ் சீனாயி மலையில் இருமுறை தங்கியிருந்து தேவ கற்பனைகளைப் பெற்றுக் கொண்டார். நாற்பது நாள் எலியாஸ் தீர்க்கதரிசி உபவாசமாயிருந்தார். இஸ்ராயேல் ஜனங்கள் கானான் தேசம் போய்ச்சேர நாற்பது வருஷம் பிரயாணம் செய்தார்கள். நாற்பது நாள் எசேக்கியேல் தீர்க்கதரிசி யூதாவின் பாவாக்கிரமங்களைத் தன்மேற் சுமந்துகொண்டு பாவப் பரிகாரம் செய்யக் கற்பிக்கப்பட்டார். நாற்பது நாள் நினிவே பட்டணத்தார் தவம் செய்யக் குறிக்கப்பட்டிருந்தது. சேசுநாதர் உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாள் தமது அப்போஸ்தலர்களோடு சஞ்சாரம் செய்தார். நாற்பது நாள் ஆண்டவர் தவம் செய்கிறார்.

இந்த நாற்பது நாளும் சேசுநாதர் தமது தேவ பிதாவோடு இரவும் பகலும் ஆழ்ந்த தியான யோகத்தில் அமர்ந்து நமது இரட்சண்ய வேலையையும், திருச்சபையையும், மனுக்குலத்தையும் சிந்தித்து எல்லோருக்காகவும், வரப்பிரசாதங்களையும் நன்மைகளையும் கேட்டு மன்றாடுகிறார். அவர் சலிப்படையாமல் செபத்தியானத்திலும் தேவஸ்துதிகளை உரைப்பதிலும் பரவசமாகி, தமது தேவ பிதாவோடு சல்லாபித்துவந்தார்.

(தொடரும்.) S. M.

ஒன்றுமில்லாதவனாகிய நீ நித்திய கருணா சமுத்திர பரப்பிரம்மத்தை சதா காலங் கண்டடைய வருகையில் சிருஷ்டிக்கப்பட்ட யாவையும் பரித்தியாகம்பண்ணி பேரின்பத்திற்கு ஊருணியாகிய பரமானந்தத்தை உறுதியாய்த் தழுவிப்பிடிப்பாயாக.

HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

7-ம் அதிகாரம்.

தேவ அக்கினியின் பிரகாசம்—பாஸிதூஸின் வருகை—தாய் சிந்தும் கண்ணீர்களின் வல்லபம்—அகுஸ்தீன் மனேக்கிய மதத்தைவிட்டு நீங்குவது.

(கி. அ. 377—383.)

அகுஸ்தீனுடைய வாலிப பருவத்தில் நடந்தேறிய காரியங்களை நாம் உற்று யோசிக்குங்கால், அவர் விஷயமாய் மேற்றிராணியார்கொண்ட தீர்மானமே சரியானது. அகுஸ்தீனுடைய மனதும் இருதயமும் கடவுளை நாடியிராதபோதிலும், அவைகள் கடவுளுக்கு எதிர்விரோதமாயிருந்ததில்லை. அவரது இருதயத்தின் உள்ளாந்தரத்தில், தேவ நேச அக்கினியின் ஒரு பொறியாவது இன்னும் அவிந்து சாம்பலாய்ப் போகாமல் இருந்தது. விசுவாசம் அவரைவிட்டு நீங்கினதென்பது உண்மையே. ஆனால் சுயமரியாதை, யதார்த்தம், உள்ளன்பு, சத்தியாபிமானம் என்னும் உணர்ச்சிகள் இன்னும் அவரைவிட்டு நீங்கவில்லை. ஆசாபாசத்தினால் அவர் முழுதும் கெட்டழிந்து போகாதபடி, அவரிடம் அடக்க வொடுக்கமும், கூச்ச நாச்சமும், மேரை மரியாதையும், சாவதானமும் இருந்தன. சாப்பிடும் பொருள் முழுதுமாய்க் கெட்டுப்போகாதபடி, அதைப் பாதுகாக்க உப்பு உதவுவதுபோல், அவர் முழுதும் கெட்டுச் சீர்குலைந்துபோகாதபடி, இக்குணாதிசயங்கள் அவரைப் பாதுகாத்துவந்தன. அர்ச். பிராஞ்சீஸ்கு சலேசியார் சொல்வதுபோல், அவர் கர்த்தரை முழுதுமாய் விட்டுப் பிரிந்துபோகாதபடி, இக்குணலட்சணங்கள் கர்த்தருடைய கைப்பிடிக்குச் சமானமாயிருந்தன.

அகுஸ்தீன் தவறிப்போனதைப்பற்றிப் பேசப்பட்டதும் எழுதப்பட்டதும் மெத்த. ஆனால் சரியானபடி அவைகளைக் கவனிக்கவேண்டுமேயொழிய, அர்ச்சியசிஷ்டவர் தாழ்ச்சியின் முகாந்தரமாய் வெளிப்படுத்தும் சங்கீர்த்தனத்தினால் மோசம்போகத் தகாது. சந்தேகமின்றி அவரது இருதயமும் மனதும் பாவத்தினால் கறைப்பட்டிருந்தன. ஆனால் மனிதனை மிருகத்திலும் கடைகெட்டவனாகச்செய்யும் அப்படிப்பட்ட அக்கிரம

சேற்றிலாவது, கடவுள் பாரிசமாய்த் திரும்ப சற்றும் ஏலாதபடி அத்தகையான படுகுழி பாதாளத்திலாவது, அவர் அமிழ்ந்தியிருக்கவில்லை. எப்போதும் அமிழ்ந்திப்போனதுமில்லை. தேவதத்தன் என்னும் பிள்ளையைத் தனக்கு விபசாரத்தில் பெற்ற வைப்பாட்டியின்மட்டில், ஒரே நிலைமையான பிரமாணிக்கமாயிருந்து, அந்தப் பையன் விஷயத்தில் அத்தியந்த பட்சபாசங் காட்டிவந்தார். தனக்கு 20 வயது நடக்கும்போதே, தனக்குப் பிறந்த மகனை யாரோவென்று மறுதலிப்பது அவருக்குச் சுலபமான காரியமாயிருந்திருக்கும். அப்படிச்செய்வது சகஜந்தானே. ஆனால் அவர் அப்படிச்செய்யாமல், பிள்ளையையும் தாயையும் கைந்நெகிழ்ந்துவிடுவது நன்றிகெட்டத்தனமென்றெண்ணி, அப்படிச் செய்யத்தகாதென்று தீர்மானித்து, அவர்களைச் சம்ரட்சணை செய்யும்படியாக வருந்தியுழைத்தார். இதுவே அவருடைய மனந்திரும்புதலை நம்பிக்கையற்றதாக்கி, அவரது மனோசக்தியைக் கெட்ட காரியங்களில் சிக்குப்படுத்தினது. வில்லெமேயின் என்பவர் விளக்கமாய்ச் சொல்லிக்காட்டுவதுபோல், “தான் ஆசாபாசங்களில் சிக்குப்பட்டிருப்பதைப்பற்றி, அவர் தன்னைத்தானே மனவருத்தத்தோடு கடிந்துகொள்ளும்போதுமுதலாய், அவரது ஆத்துமம் ஒருவிதமான கம்பீரத்தை யுடைத்தாயிருந்தது.”

அகுஸ்தீனுடைய மனதும், அவருடைய இருதயத்தைப்போலவே பாவக்கறைப்பட்டிருந்ததென்பது உண்மையாயினும், அம்மனதும் அவ்விருதயத்தைப்போல அவ்வளவு சீர்கெட்டதாயிருந்ததில்லை.

தான் பற்றிக்கொண்டு தனது பந்துமித்திரர்களுக்கு அவ்வளவு வைராக்கிய சித்தத்தோடு போதித்துவந்த பிரிவினை சபையானது, சத்தியமென்றவருக்குத் தோன்றினமையால்தான் அங்ஙனம் செய்தார். அவர் கூவிச் சொல்வது “ஓ! சத்தியமே, சத்தியமே, வாயினால்மாத்திரமல்ல, அநேக பெரிய பிரபந்தங்கள்மூலமாய்ப் பலவிதத்திலும் உன்னைப் பிறர் எனக்குக் காட்டினபோது, நான் பாவச்சேற்றிலிருந்தபோதிலும், என் ஆத்துமமானது எவ்வளவு மனப்பூரணத்துடன் உன்னை நாடித் தேடினது! நான் பசிதீபனங் கொண்டவனைப்போல் உன்னைத் தேடியலைந்தேன். ஆனால் அத்தீபனத்தை அடக்க எனக்குக் கிடைத்தது சாதமல்ல, ஆனால் வெறும் உமியே.” மீளவும் அவர் சொல்வது “ஓ! கடவுளே! உம்மை நாடி உம்மிடம் எனது குறைகளைச் சொல்லி ஆறுதலைத் தேடாதிருக்கும்போதே, என்மட்டில் இரக்கங்காட்டிய தேவனே, நான் சத்தியத்தைத் தேட முயன்றதில் உம்மையே நாடித் தேடினேன். ஆனால் நீர் இருக்கிற இடத்தை விட்டுவிட்டு, வேறு இடத்தில் உம்மைத் தேடினேன். ஆனால் நீரோவெனில், என் உள்ளாந்தரத்தில் நானறிந்ததைவிட அதிக நெருங்கின ஐக்கியமாய் உள்ளாந்தரத்தில் இருந்தீரே.” கடவுளும் இதை அகுஸ்தீனுடைய மனச்சாட்சியில் கண்டுகொண்டார். அவர் அசத்தியத்தைப் பின்பற்றியும், உண்மையில் சத்தியத்தையே தேடி சத்தியத்தையே விரும்பினர்.

ஆனால் ஆங்காரம் அவர் ஆத்துமத்தை மேற்கொண்டது. “உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமோ?” என்பதை மறந்து, கழுகுக்கொத்த இறக்கையும் பார்வையும் தனக்கிருப்பதாகநினைத்துக்கொண்டு, இன்னும் உயர உயரப் பறக்க ஆசித்தார். பேர் கீர்த்திக்காக அலைவார். நாடகச் சாலைகளில் கீர்த்தியடையும்படி ஆசைப்படுவார். செய்யுள் இயற்றி, வாக்கலங்கார சாதுரியத்தைக் காட்டி பேரெடுப்பவர்களுக்குச் சூட்டப்படும் முடிமாலை, தனக்கு என்று கிடைக்குமோவென்று ஆவலுடன் சிந்திப்பார். ஆனால் இக்கௌரதைகளையடைய, அவர் அசத்தியத்திற்கும் துன்மார்க்கத்திற்கும் அடுத்தவைகளை எழுதியிருக்கமாட்டார். தன் மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்திருக்கவுமாட்டார். அப்படி நடந்து தன் சீவியத்தை பங்கப்படுத்தியிருக்கவுமாட்டார். அவர் சொல்வது “நாடகத்திற்கு ஒரு செய்யுள் இயற்றி வெகுமதியடைய நான் முயற்சி செய்தபோது, அப்படிப்பட்ட வெகுமதியை நான் அடைய தான் உதவி செய்தால், அதற்குச் சம்பாவனையாக நான் என்ன கொடுப்பேனென்று ஒரு ஜோஷியன் ஒரு ஆள் மூலியமாய் என்னைக் கேட்டான். நான் அந்த ஆளைப் பயங்கரத்துடன் வெறுத்தோட்டினேன்.” ஆனால் தன் சுயமுயற்சியின் பலனை, சுமார் 378-ம் வருஷத்தில், விந்திஸியான் என்னும் ஸ்தானாபதியினால், நாடகசாலையில் பிரசித்தமாய் கிரீடஞ் சூட்டப்பட்டார்.

இலக்கியம், வாக்கலங்கார சாஸ்திரம் ஆகிய இவைகளைக் கற்பிக்கும் போதகாசிரியரா யிருக்கும்போதும், அவரிடம் இவ்விதமான நேர்மைத்தனமும் நல்லுணர்ச்சியுமே விளங்கிவந்தன.

கள்ள நியாயவாதிபதிகள் தப்பு போதனைகளைப் போதித்துவந்தபடியால், தங்களுக்கு இருந்த வாக்கு வல்லமையை ஈனமான காரியங்களுக்கு உபயோகித்துவந்தார்களென்னத்தகும். சிலர் அப்படியே செய்துவந்ததுமன்றி, அதனால் காசு பணமும் சம்பாதிப்பார்கள்.

இதை அகுஸ்தீன் பொறுக்கமாட்டார். ஜனங்களால் நிராகரித்துத் தள்ளப்படும் சத்தியம், புண்ணியம், நீதி, நன்மைத்தனம், ஆகிய இவைகளுக்காகவே வாக்கு சாதுரியத்தோடு பாடுபடவேண்டுமென்று தீர்மானித்து, தன்னிடம் ஒப்பிக்கப்பட்ட மாணாக்கர்களும் இந்த உத்

தம கருத்துகளுக்காகவே தங்கள் சாமர்த்தியத்தை உபயோகிக்கும்படி அவர்களைப் பயிற்றுவிக்க பிரயாசைப்பட்டுவந்தார்.

அகுஸ்தீன் தனது 22-ம் வயதில் திருச்சபையை விட்டுப்பிரிந்து, பரஸ்திரீ கமனமென்னும் சங்கிலியினல் கட்டப்பட்டிருந்தபோதிலும், "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது போல், தன் தாயார் தனது குழந்தைப்பருவத்தில் தனக்குக் கற்பித்துவந்த சுயமரியாதை, சுசீலம், பத்திப்பிரமாணிக்கம், என்கிற இவையன்றி மற்றும் சகல புண்ணியங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் உடைத்தாயிருந்தார். இப்படி அவர் கொஞ்சம் புண்ணியப் பயிற்சியுள்ளவராயிருந்தபடியால், அவருடைய தாறுமாருன சீவியம் குற்றமற்றதென்று நாம் சொல்லாவிட்டாலும், அப்பயிற்சியே அவர் தன் அக்கிரமத்திற்குத் தேவ மன்னிப்பை நாடி யடையக் காரணமாயிருந்தது. அவர் சொல்லுவது "ஓ! கடவுளே, வழுக்கலான எனது பாதையில் நான் தத்தித் தள்ளாடி வழிநடந்து போகுங்காலையில், என் ஆத்துமத்தைச் சூழ்ந்திருந்த அடர்த்தியான கார் மேகத்தினிடையில், நேர்மைத்தனம், கண்ணியம், ஆகிய இவைகளின் சிறு பொறிகளை என்னிருதயத்தில் கண்டீர்."

தன் குமாரன் ஆசாபாசங்களில் சிக்கித் தீய வழியில் நடந்துவருகிறதைக்கண்டு மனநொந்திருந்த மோனிக்கம்மாளுக்கு, ஆறுதல் அத்தியாவசியமாயிருந்தது. கார்மேகத்தின் இடையில் பளிச்சென்று மின்னல் மின்னுவதுபோல், பாவ அந்தகாரத்திலிருக்கும் அவரது ஆத்துமத்தில் புண்ணிய வொழுக்கத்திற்கடுத்த கொஞ்சம் மங்கலான சோதியாவது தோன்ருதோவென்று ஆவலோடு எதிர்பார்ப்பாள். "புகையைக்கண்டு நெருப்புண்டெனை அறிவதுபோல்" புண்ணியத் தின்மட்டில் அவருக்கிருந்த விருப்பத்தைக்கண்டு, தேவ நேச அக்கினிமுற்றிலும் அவிந்துபோகாமல் அவருடைய ஆத்துமத்தில் இன்னும் கனைந்துவருகிறதென்று திட்டமா யறிந்தாள். அவருடைய சிநேகிதர்களில் ஒருவர் திடும்பிரவேசமாய்க் காலமானபோது, அவர் தாரைதாரையாய்க் கண்ணீர்சிந்தி யழுதார். இதை லௌகிக ஞான அநுபோகசாலிகள் கண்டு, அவர் சந்தேகமின்றி தீய வழியைவிட்டு ஒரு நாள் நல்வழியை யடைவாரென்று நம்பிக்கைகொண்டார்கள். ஏனெனில் எங்கு ஆசாபாசம் இருக்குமோ, அங்கு அன்பென்பது அற்றுப்போகும். கெட்ட சந்தோஷங்களை நாடுகிறவன், சுத்த சுசீலமும் மாதுரியமுமுள்ள சிநேக சம்பந்த சந்தோஷங்களுக்கு முழுதுமே உணர்ச்சியற்றவனுகிருன்.

அவர் சொல்வது "எனது சுயநாட்டில் நான் வாத்தித்தொழில் முதல்முதலாகச் செய்துவரும்போது, எனக்கொரு சிநேகிதன் இருந்தான். வயதில் எனக்கவன் ஜதையாயிருந்தபடியாலும் எனது பள்ளித்தோழனுயிருந்தபடியாலும் அவன்மேல் எனக்கு வெகு பிரியம். நாங்கள் இருவரும் ஒரே வயது. நல்ல பாலப்பருவம். ஒன்ருய் வளர்ந்து, ஒரே பள்ளிக்கூடத்திற்குப்போய், ஒன்ருய் விளையாடுவோம். ஆயினும் இச்சரிதைக்கடுத்த காலத்தில் எங்களுக்குள்ளிருந்தபடி அவ்வளவு பட்சபாசம் அக்காலத்தில் இருந்ததில்லை. மேலும் நிதார்த்தமான சிநேக வொழுக்கப்படி, அப்பாசபட்சமும் பிற்காலத்தில் அவ்வளவு விசேஷமாயிருந்ததில்லை. ஏனெனில் கர்த்தாவே, இஸ்பிரீத்துசாந்துமூலமாய் நீர் எங்களிருதயத்தில் பொழியும் பிறசிநேகத்தை, ஆதாரமாய்க்கொண்டிருக்கும் நேசர்களுக்குள் இருக்கும் சிநேகமே, சரியான சிநேகம்."

அகுஸ்தீன் விருத்தாப்பியப்பருவமடைந்து மேற்றிராணியாரானபிறகு, சங்கீர்த்தனம் என்னும் புஸ்தகத்தை யெழுதும்போது, தனது கர்த்தாவுக்கு இவ்விதமாக ஸ்தோத்திரம் செலுத்தி, தனது வாலிப வயதின் சிநேக சம்பந்தத்தைப் பற்றி இன்னும் சொல்வதாவது "இருந்தும் எங்களுக்குள்ளிருந்த பட்சபாசம் மிகவும் மாதுரியமுள்ளதே. ஏனெனில், நாங்கள் ஒரேவிதமான மனப்பயிற்சியை நாடி வந்ததினுல், அப்பட்சமுண்டாகலாயிற்று. அவனுக்குச் சத்திய வேதம் நன்ருய்த் தெரியாது. நான் சத்திய வேதத்திற்கு விரோதமான கட்டுக்கதைகளையும், அபத்தங்களையும் அவனுக்குச் சொல்லி, அவன் மனதைக் கெடுக்க, அவனும் அவ்வேதத்தைவிட்டுப் பிரிவினை சபையில் சேர்ந்துவிட்டான். இப்படிப் பட்ட கட்டுக்கதைகளையும் அபத்தங்களையும் யான் போதிப்பதைப்பற்றி, என் தாயார் பிரலாபித்து அழுவாள். குருடனுக்குக் குருடன் வழி காட்டுவதுபோல், நான் அவனுக்கு வழிகாட்ட, என்னேடுகூட அவனும் நெறிதவறிப்போனன். அவனில்லாவிட்டால் எனக்கு மனச்சமாதானமிராது."

ஏறக்குறைய ஒரு வருஷகாலம், அகுஸ்தீனும் அவருடைய சிநேகிதனும் மாதுரியமான இணக்கத்தோடிருக்குங் காலையில், அச்சிநேகிதனுக்கு அபாயமான வியாதியுண்டாயிற்று. அகோர காய்ச்சலினுல் வாதிக்கப்பட்டு, சாவிற்கு முன்குறிப்பான மரண வேர்வை ஜலமாய் ஓட, பிரக்கினை தப்பிக்கிடந்தான். அவன் பிழைக்க மாட்டானென்று தெரியவந்தபோது, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஏனெனில் அக்காலத்திலே நடந்துவந்தபடி, அநேக வாலிபர்களைப்போல் அவனும் வேதத்தில் சேரப் பேர் கொடுத்தவனே. ஞானஸ்நானமாகும்போது அகுஸ்தீன் அச்சடங்கை அசட்டைத்தனத்து

டன் பார்த்துக்கொண்டிருந்தார். ஏனெனில் மரணப்படுக்கையிலிருந்த அந்தச் சிநேகிதனுடைய மனதில், தான் சத்திய வேதத்திற்கு விரோதமாய் எழுப்பிய வெறுப்பை, சுவாமியார் அவன்பேரில் தெளித்த கொஞ்சம் தீர்த்தத்தினால் மாற்றமுடியாதென்றெண்ணினார். ஆதலால் அவர் மீளவும் சொல்வது "நானும் அவனும் அவ்வளவு பிராண நேசர்களாயிருந்தபடியால், நான் அவனைவிட்டுப் பிரியவேயில்லை. ஆகவே அவனுக்குப் புத்தி தெளிந்து கொஞ்சம் பேசத் தொடங்கியவுடன், அவன் ஸ்மாரணைதப்பியிருந்தகாலத்தில், அவனுக்குக் கொடுத்த ஞானஸ்நானத்தைப்பற்றி, அவனிடம் பரியாசம் செய்யத் தொடங்கினேன். அவனும் என்னுடன் சேர்ந்துகொண்டு அச்சடங்கைக் கேலிசெய்வானென்று நினைத்தேன். ஆனால், என் பரியாச வார்த்தைகளைக் கேட்டதும், சத்துராதியைப் போல் அவனென்னை வெறுத்துத்தள்ளி, இதோ நமக்குள்ளிருந்த சிநேகத்தின்பேரால், அவ்விதமாய் இனி பேசவேண்டாமென்று ஒரே கண்டிப்பாய் பதிலுரைத்தான். இவ்வளவு நிஷ்கபடத்துடன் அவன் பேசுவானென்று நான் எதிர்பார்க்கவேயில்லை."

அகுஸ்தீன் வெகுவாய் வியப்படைந்து, தான் அங்ஙனம் கேலிசெய்ய உண்டான காரணங்களைக் கேட்டறிய அவனுக்குப் பலமுண்டாகுமட்டும் காத்திருந்து, பிறகு அவைகளைத் தெரிவிப்பது நல்லதென்றெண்ணி, தற்சமயம் மவுனமாயிருந்துவிட்டார். ஆனால் வியாதியஸ்தனுக்கு இப்படியாய் ஆபத்துவர கடவுள் விடவில்லை. சில நாள் பொறுத்து, அகுஸ்தீன் இல்லாத காலத்தில், மறுபடியும் ஜுரங்கண்டு மரணமடைந்தான்.

அகுஸ்தீன் திரும்பிவந்து, தன் நேசன் காலமடைந்ததைக்கண்டபோது, அவருக்கிருந்த துக்க துயரம் இவ்வளவவ்வளவல்ல.

அத்துக்கம் இத்தன்மைத்தென்று அகுஸ்தீனே நமக்குச் சொல்லியிராவிட்டால், அதன் பெருக்கத்தின் அளவை நம்மால் கிரகிக்கமுடியாது.

அவர் சொல்வது "அவனை நானிழந்துபோனதைப்பற்றி, என் ஆத்துமா ஆழ்ந்த துக்கத்தில்அமிழ்ந்திப்போனது. எதைப் பார்த்தாலும், அவனுடைய மரணத்தின் ஞியாபகமேயெனக்குண்டாகும். என் ஊரிலிருப்பதே எனக்கொரு துன்பமாயிருந்தது. என் தாயாருடைய வீடு எனக்கு பாழாகத் தோன்றினது. நானும் அவனுமாய்ச் சேர்ந்து எந்தெந்த புஸ்தகங்களை வாசித்துச் சந்தோஷம் அநுபவித்துக்கொண்டிருந்தோமோ, அந்தப் புஸ்தகங்களைப் படிக்கப் போனால் எனக்குக் கசப்புதட்டும். அவன் இல்லையே, இல்லையேயென்று' எப்போதும் என் இருதயம் பிரலாபிக்கும். என் சிநேகிதன் இல்லாதவிடமெல்லாம் எனக்கு வெறுமையாய்த் தோன்றிற்று. அவன் சீவனோடிருந்தகாலத்தில், ஒரு நாள் நான் அவனைப் பார்க்காவிட்டால், அவன் எங்கேயென்று யாரையாவது கேட்பேன். இதோ சீக்கிரம் வந்துவிடுவான், என்றெனக்குப் பதிலுரைப்பார்கள். அப்படிப்பட்ட பதில் எனக்கிப்போது சொல்பவர்களில்லையே. உலக சீவியம் எனக்கு ஒரு பெருஞ் சுமையாயும், கண்ணீர்சிந்தி யழுவதே எனக்காறுதலாயுமிருந்தன."

"ஆண்டாண்டுதோறு மழுது புரண்டாலு மாண்டார் வருவரோ மாநிலத்தீர்" என்று அவருக்காறுதலளிக்க, அவருடைய தாயார் பட்ட பிரயாசையும், அவர் விசனத்தை மறக்கடிக்க, அவர் சிநேகிதர்கள் பட்டபாடும் வியர்த்தமாயின. அவர் துக்கந் தெளிந்து ஆறுதலடையும்படி ஞானக்காரியங்களைச் சிந்தியாதபடியால், வியாகுலம் என்னும் சாகரத்தில் அமிழ்ந்திப்போனார். அவர் சொல்வது "நான் ஆறுதலற்றுப் போனேன், பெருமூச்சுவிட்டேன், அழுதேன், மனக்கலக்கமடைந்தேன், இருதய சமாதானத்தையிழந்தேன், என்னைத் தேற்றுபவர் யாருமில்லை. வேடனுடைய அம்பினால் எய்யப்பட்டு, இரத்தம் வடிய ஓடும் மானுக்கொப்ப, என் ஆத்துமமானது வியாகுலசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தது. சீவியமே எனக்கு நிர்ப்பந்தமாயிருந்தபடியால், எப்படி இவ்வுயிரைத் தொலைப்பதென்று கவலைகொண்டிருந்தேன். சிங்காரவனங்களுக்கும் பூஞ்சோலைகளுக்கும் போவேன். நாடகங்களுக்கும் பஜனைகளுக்கும் போவேன், புஷ்பங்களைச் சூடிக்கொள்வேன். செண்டுகளைக் கையில் பிடித்துக்கொள்வேன். கீர்த்தனம் பாடுவேன். ஆனால் எனக்குச் சந்தோஷம் கிடையாது. "நெருநலுளனொருவன் இன்றில்லையென்னும் பெருமையுடைத் திவ்வுலகு" என்பதையும் நினையாமல், என் நேசன் இறந்தானே, என் நேசன் மாண்டானே என்னும் எண்ணமே, பச்சைப் புண்ணில் இருப்புச் சலாகையிட்டுக் குடைவதுபோல், என் இருதயத்தை மேலும் மேலும் புண்படுத்திவந்தது. எதைக்கண்டாலும் எனக்கு வெறுப்பே. சூரிய வெளிச்சத்தை என்னால் சகிக்கமுடியவில்லை. என் சிநேகிதன் இல்லாததே எனக்குப் பெருந் துயரமாதலால், அவனன்றி வேறு எதைக்கண்டாலும் எனக்குச் சந்துஷ்டி கிடையாது. எப்போதும் பெருமூச்சுவிட்டு அழுவதே வேலையாயிருந்தேன். அப்படியழுதால்தான் எனக்குக் கொஞ்சம் மன ஆறுதலுண்டாகும்."

தான் தகாஸ்தே நகரைவிட்டுப்போகவேண்டியதென்று அகுஸ்தீனுக்குத் தெரியவந்தது.

தானும் தன் நேசனும் ஒன்றுகூடி நடந்துபோன தெருவீதிகளையும், தாங்கள் நடமாடின கட்டடங்களையும், தாங்கள் உட்கார்ந்து வாசித்துக் கொண்டிருந்த இடங்களையும், அதாவது அப்படி வாசித்துக்கொண்டிருந்ததினால், தங்களிடம் பெருகிவந்த சுத்த உருக்கமுள்ள பட்சத்திற்குச் சாட்சியாயிருந்த இடங்களையும், அச்சிநேகிதன் செத்தபிறகு கண்டால் அவருக்கு வெறுப்பு தட்டும்.

அவர் சொல்வது "அவன் என்றும் சாகவே மாட்டானென்பதுபோல் நான் அதுவரையில் நினைத்துவந்தேன். உயிரும் உடலும்போல அவ்வளவு பாசத்துடன் நான் நேசித்துவந்த நேசன் செத்துப்போனபிறகும், இன்னும் உலகத்தில் ஜனங்கள் சீவிப்ப தெப்படியென்று எனக்குள் ஆலோசிப்பேன். அவனில் ஒரு பகுதியாயிருந்த நான், அவன் போனபிறகும் சீவிப்பதெப்படியென்று சிந்திப்பேன். இப்படியெல்லாம் சிந்தித்து வெகுவாய் அதிசயமுற்றேன். சிநேகிதன் தன் உயிரில் பாதியென்று கவிவாணன் சொல்வது சரியே. எனெனில், என் உயிரும் அவன் உயிரும் இரு சரீரங்களில் அமைக்கப்பட்டிருந்த ஒரே உயிரென்று நான் உணர்ந்தபடியால், அந்த ஒரே உயிரில் பாதி உயிர்போன பிறகு, மிச்சம் பாதி உயிரோடு சீவிக்க எனக் கிஷ்டமிருந்ததில்லை. அதைப்பற்றியே சீவியத்தில் எனக்கு வெறுப்புதட்டினது" என்றார்.

(இன்னும் வரும்.)

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—1.

செபஸ்தியானும் பென்தாவீதும்.

கிறீஸ்து பிறந்த 711-ம் ஆண்டில் அராபியர் ஸ்பெயின் தேசத்தின்மேல் படையெடுத்துச்சென்று, மூன்று வருஷங்கள் இடைவிடாமல் கிறீஸ்துவர்களுடன் சண்டைசெய்து, அஸ்தூரியாஸ் நாட்டெல்லை வரையிலுள்ள இராச்சியங்களையெல்லாங் கைப்பற்றிக்கொண்டனர். சில கிறீஸ்துவப் போர் வீரர் தன் தலைவனாகிய பிலாஜன் என்பவனுடன் அந்நாட்டை யடைந்து, அங்கிருந்தே தமது சுயேச்சையைக் காப்பாற்றிக்கொள்ளத் தீர்மானித்து, எதிரிகளுடன் போராடிக்கொண்டிருந்தனர். பிலாஜனைப்போலவே வீரதீரம் வாய்ந்து அவனுக்குப்பின் வந்த வீரர்கள், அராபியரையும், சாரஸின் ஜாதியாரையும் எதிர்த்துப் போராடியதுடன், பிற்காலத்தில் தங்கள் நாட்டெல்லையைத் தாண்டிவந்து எதிரிகளைத் தாக்கிச் சண்டையிட்டு, சில நகரங்களையும் பிடித்தார்கள். அப்படியே 914-ம் வருஷத்தில் லியோன் பட்டணத்தில் இரண்டாவது ஆர்டோகோன் என்னும் அரசனது ஆளுகையில் முதல் கிறீஸ்துவ இராச்சியம் ஸ்தாபிக்கப்பட்டது. அதுமுதல் கொஞ்சங்கொஞ்சமாய் கிறீஸ்துவர்களின் அதிகாரம் எங்கும் பரவ ஆரம்பித்தது. பின்னர் காஸ்டைல், நாவார், ஆரகன் என்னும் கிறீஸ்துவ இராச்சியங்கள் ஏற்பட்டன; பார்சிலோனாவையும் ஒரு கிறீஸ்துவப் பிரபு ஆண்டுவந்தார். 1035௵ முதல் 1065௵ வரையில் பேர்டினாண்டு அரசரும் அவருடைய குமாரனாகிய அல்பான்சோவும் சாரஸீனியரைத் தொடர்ந்து போராடினர். மகம்மதியராகிய சாரஸீனியர் இவ்வளவு நாள் கத்தோலிக்கருடன் போர்செய்து பின்னிடையாமலிருந்ததற்குக் காரணம், ஆபிரிக்காவினின்று ஜூஸூப் என்னும் மகம்மதியத் தலைவன் கொடுத்துவந்த நல்ல உதவியேயன்றி வேறல்ல.

ஆனால் இந்தச் சமயத்தில் ஒரு விஷயம் கிறீஸ்துவர்களுக்குச் சாதகமாயிருந்தது. அதாவது, பகைவர்களுக்குள் எப்போதும் உண்டாயிருந்த சண்டை சச்சரவுகளும் கலகங்களுமே. அப்துர் ரஹிமான் என்பவன் இஸ்பானிய அராபியாவையெல்லாம் ஒரு இராச்சியமாகச் சேர்த்து கோர்டோவா என்னும் நகரை அரசிருக்கையாக ஸ்தாபித்துக் கொஞ்சகாலம் ஆண்டுவந்தான். அவனுக்குப்பின் அவன் சந்ததி யழியவே, அவனுக்குக்கீழிருந்த பல மாகாணத் தலைவர், கோர்டோவா அதிகாரத்துக்குக் கட்டுப்படாமல், குறுநில மன்னர்களாய்த் தத்தம் இராச்சியங்களை ஆளத்தொடங்கினர். இப்படிச் சுயாதிகாரம் பெற்றவர்களில் முக்கியமானவர், செவில், டோலீடோ, மெரிடா என்னும் மாகாணங்களை யாண்டவர்களே.

இஸ்பாஞ்ஞியருக்கும் மகம்மதியருக்கும் சுமார் முந்நூறு வருஷங்களாகக் கனத்த போர் சதா நடந்துகொண்டேவந்தது; கிறீஸ்துவர்கள் தம் எதிரிகளைத் தேசத்தினின்றும் கடைசியாய்த் துரத்துவதற்குள், சுமார் 1,700 யுத்தகளங்களில் சண்டைசெய்திருப்பதாகத் தெரிகிறது. 1492-ம் வருஷம் துலுக்கர்வசங் கடைசியாய் நின்ற நகரமாகிய கிரநடாவை பெர்டினாண்டரசர் கைப்பற்றவே, ஆல்ஜக்கீர் என்பவன்

முழந்தாட்படியிட்டு ஜெயம்பெற்ற அரசனிடம் அந்நகரத் திறவுகோலை ஒப்புவித்து, ஆபிரிக்காவுக்குத் திரும்பிப்போய்விட்டான்.

இந்தப் பெரும் யுத்தந் தொடங்கிய மூன்றுவது நூற்றாண்டில், இரண்டாவது அல்பான்சோ வென்பவர் அத்தேசத்திய அரசர். அவர் காலத்தில் ஒரு நாள் வீரதீரபராக்கிரமமும் சிறந்த முகலட்சணமும் பொருந்திய ஒரு யௌவன யுத்த வீரன் டௌரோ நதி தீரத்தினின்றும் ஓங்கி வளர்ந்து படர்ந்துள்ள மலைத் தொடர்ச்சியைக் கடந்து, அநேக போர்க்களங்களுக் கிடமாயிருந்த சாலமான்கா என்னும் நகரை நாடிப் போய்க்கொண்டிருந்தான். கிறீஸ்துவர்களின் அரண் என்று சொல்லப்படும் அஸ்தூரியாவுக்குப்போக அம்மலைப்பிரதேசத்தில் அநேக ரஸ்தாக்களும் ஓரடிப்பாதைகளும் பல திக்குகளினின்றும் வருவதைக்காணலாம். அச்சமயம் நடுவேனிற்காலம்; சூரியன் தன் கிரணங்களை வேகமாய் விடுத்து வெப்பத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருந்தான்; களைப்படைந்த நமது இளம் வீரன் குதிரையை மெதுவாய்க் கையாற் பிடித்துக்கொண்டு நடந்துகொண்டிருந்தான். அவனையும் குதிரையையும் பார்க்கும்போது, அவர்களிருவரும் அன்று முழுவதும் பிரயாணஞ்செய்ததால் மிகக் களைப்பெய்தி வருந்துவதாகத் தெரிந்தது. அவ்விளைஞன் பாதைகள் நிறைந்த அம்மலைநாட்டில் தங்குதடையின்றி நடந்துபோனதைப் பார்க்கும்போது, அவனுக்கு அப்பக்கமெல்லாம் பழக்கம்போல் காணப்பட்டது.

கடைசியாய் அவன் அம்மலை யுச்சியையடைந்தான். அங்கே நமது இரட்சகரின் உருவமும் அவரது திருத்தாயாரின் சாயலுந் தீட்டப்பெற்ற ஒரு சிலுவை நாட்டப்பட்டிருந்தது. சேசுவை நோக்கி ஒரு மனவல்லய ஜெபமாவது சொல்லாமலும், தேவதாயாரின் பாதுகாவலில் தன்னை ஒப்படைக்காமலும் கிறீஸ்துவ ஞானகிய அவன் எப்படி அவ்விடத்தைவிட்டுப் போகக்கூடும்? தன் தலைச்சீராவைக் கழற்றி, முழந்தாட்படியிட்டு, அக்காலத்தில் சாதாரணமாய் எல்லா கிறீஸ்துவ வீரர்களும் வெகு பிரியத்துடன் சொல்லுவதுபோல், அவனும் சத்திய வேதந் தழைத்தோங்கவும், அஞ்ஞான மழியவும் வேண்டிக்கொண்டான். பின்னர் குதிரையேறி மலையின் மறுபக்கத்தில் இறங்கினான். கொஞ்சநேரத்துக்கெல்லாம், மரங்களும் புதர்களும் நெருங்கி யடர்ந்து சிற்றிருளாயிருந்த ஒரு காட்டுக்குள் நுழைந்தான். அவன் போகையில், அவன் வலது கரம் உடைவாளின்பேரிலும் கண்கள் நாலாபக்கமும் சுற்றிக்கொண்டுமிருந்தன; இதனால் அவன் பகைவரால் திடீரென எதிர்க்கப்படலாமென்றும், அதை முன்னிட்டே அவன் இவ்வளவு ஜாக்கிரதையுடன் போகிறானென்றும் நாம் சொல்லாமலே இதை வாசிப்போர் ஊகித்தறியலாம். இவ்வாறு அவன் மெதுவாய் அக்கானகத்தூடே போகையில் குறுக்கே ஒரு சிற்றாறு தென்பட்டது. அது சமீபத்தில் பெய்த மழையால் நீர் நிறைந்திருந்ததுடன், ஜலமும் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அவ்வாற்றைக் கடப்பதற்காகக் கட்டப்பெற்றிருந்த ஒரு சிறு பாலமும், நீரோட்டத்தின் வேகத்தால் உடைந்துபோயிருந்தது. ஆனால் வேறொரு பக்கத்தில் ஒரு மனிதன் நடக்கக்கூடிய ஒரு சிறிய ஓரடிப் பாலமட்டும் மிக்க அபாயகரமான நிலைமையில் முறிந்து விழுவதுபோல் நின்றுகொண்டிருந்தது. அப்பாலத்தால்தான் அப்பக்கம் வரநேரிடும் பிரயாணிகள் ஆற்றைக் கடக்கலாம். அவர்களும் மனத்திடமும் தைரியமுமுள்ளவர்களானால்மட்டும் அப்பாலத்தின்மேல் நடக்கத்துணிவார்களேயன்றி, மற்றவர்களால் அதைக்கடக்க முடியாது.

இத்தகைய இடையூறுகளால் திகைப்புண்டு நிற்பவனல்ல நமதிளவல். ஒருக்கணமுந் தாமதியாமல், தன் குதிரையைத் தட்டி ஆற்றிற் பாய்ந்து மறுகரையை நோக்கி அவன் நீந்திப்போகையில், யாரோ ஆபத்தில் சிக்கியவஸ்தைப்படுவதுபோல் ஒரு சத்தங்கேட்டது. அவன் ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான். ஒரு பிரயாணி மேற்கூறிய ஓரடிப்பாலத்தைக் கடக்கையில் பாலமுடைந்து ஆற்றில் விழுந்து தத்தளிப்பதைக் கண்டான். உடனே அந்நிர்ப்பாக்கிய மனிதனை எப்படியாவது காப்பாற்றுவதெனத் தீர்மானித்தான். தன்னைப்போலும் வீரருக்கடுத்த பிரதிக்கினைகளை ஞாபகப்படுத்திக்கொண்டவனாய்ச் சற்றுந் தாமதியாமல், தன் குதிரையைத் திருப்பி ஜலப்பிரவாகத்தை யெதிர்த்து அப்பிரயாணி யிருக்குமிடத்தை நாடிச்சென்றான். அவன் அங்கே போவதற்குள் அந்நிர்ப்பாக்கிய மனிதன் பலவீனத்தால் நீந்தமுடியாமல் தண்ணீருக்குள் முழுகிவிட்டான். நமது வீரன் அவ்விடத்தை யணுகியதும், அப்பிரயாணியின் தலை வெளிகிளம்பவே, அதைப் பற்றியிழுத்துத் தனக்குப் பின்னால் குதிரைமேற் போட்டுக்கொண்டு, தன்னைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும்படி அவனை ஏவினான். அவனும் அப்படியே பிடித்துக்கொள்ளவே, நமதிளைஞன் குதிரையைத் தட்டிவிட்டுக்கொண்டு வெகு சிரமப்பட்டு மறுகரையேறினான். உடனே குதிரையைவிட்டிறங்கி, தான் காப்பாற்றிய பிரயாணியை மெதுவாய்க் கீழே யிறக்குவதற்குள், அவன் செத்த பிரேதம்போல் பூமியில் விழுந்துவிட்டான். வீரன் அவன் முகத்தையுற்று நோக்கினான்; உடனே அருவருப்பால் சற்றே பின்னடைந்து, "ஓ! ஒரு யூதன்! யூதன்!! இவன் இவ்வழி வந்ததெப்படி? இவனுக்கு இங்கே என்ன வேலை? ஒருக்கால் வியா

பாரத்தின்பொருட்டு வந்தானே? ஆ! மெய்யாகவே இந்த தேசத்தில் எங்கு சென்றபோதிலும் இந்த யூதரைக் காணமல் இருக்கமுடியவில்லையே! சபிக்கப்பட்ட இந்த ஜாதியாரில் இத்தகைய ஆபத்தான பாலத்தைக் கடப்பதற்கான மனத்துணிச்சலுடையவனும் ஒருவன் இருக்கிறான் என்பதை நான் ஒருபோதும் நம்பியிரேன்" என்று அந்த யூதனை ஏளனஞ்செய்து பேசினன். இதற்கிடையில் அவ்வீரன் தன்னுடைக்குள்ளிருந்து ஒரு புட்டியை யெடுத்து அவ் யூதனைக் கொஞ்ச மதுவருந்தக் கொடுத்தான். "நீயே புட்டியை வைத்துக்கொள். ஒரு யூதன் வாய் வைத்துக் குடித்த குப்பியினின்றும் ஒரு கிறிஸ்துவ வீரன் மதுவருந்தல் ஒருபோதும் முடியாத காரியம் என்று நீ அறிவாயல்லவா?" என்றான். யூதனே பதிலொன்றுஞ் சொல்லாமல் மிகத் தாழ்மையாய்ப் புட்டியைக் கையில் வாங்கி வீரன் சொன்னபடிச் செய்யவே, இளைஞன் தன்னுடையில் ஒட்டிக்கொண்டிருந்த மண்ணையும் தண்ணீரையும் உதறிவிட்டு, தன் குதிரையை அருகிலிருந்த புற்றரையில் சற்றே மேயவிட்டான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் யூதன் களைதெளிந்தவனாய், சற்றுக் கஷ்டத்துடன் எழுந்து, தன்னைக் காப்பாற்றிய சுத்தவீரனுடைய பாதங்களில் வீழ்ந்து சொன்னதாவது: "ஆண்டவர் உமக்கு ஆயிரமடங்கு பலனளிப்பாராக! ஒரேழை யூதனுக்காக நீர் இன்று செய்த பேருபகாரத்துக்கு ஆண்டவர் உமக் கருள்புரிவாராக! அவருடைய காவலுங் கிருபையும் உமக்கெப்போதும் இருக்கவும், நீர் என்னை இன்று காப்பாற்றியதுபோல், அவரும் உம்மைச் சகல அவசரங்களிலுங் காத்து இரட்சிக்கவும் திருவுளங் கொள்வாராக! தண்ணீர் பிரவாகத்திலும், பொங்கி யெழுந்து மோதும் சீவிய அலைகளிலும் உமக்காக ஒரு பாலத்தையாவது அல்லது நோயன் பெட்டகத்தைப்போல் ஒரு பேழையையாவது தயார்செய்து கொடுத்து, அமைதியும் சமாதானமும் நிறைந்த இடத்தில் கொண்டு சேர்ப்பாராக! சாலமோனின் ஞானத்தையும், தாவீதின் செல்வத்தையும், சஞ்சோனின் தேகபலத்தையும் உமக்களிப்பாராக! தோபியாஸ் என்னுஞ் சிறுவனை இரபயேல் என்னும் தேவதூதன் முற்காலத்தில் துணைசென்று நடத்தியதுபோல, தேவதூதர் உமக்குத் துணையாயிருப்பாராக! இரவில் உமக்கு வழிகாட்ட சந்திரன் நன்றாய்ப் பிரகாசிப்பானாக! பகலில் சூரியன் உமது பாதையை விளக்க கதிர்விட்டுப் பிரகாசிப்பானாக! உம்முடைய பகைவர் உம்மிடந் தோல்வியடைந்து, உம்முடைய பாதங்களில் வீழ்ந்து அபயங்கேட்பாராக! எல்லா விஷயங்களிலும் உமது விருப்பம் நிறைவேறுவதாக! உமது எண்ணம் நிறைவேற ஒரு ஏழை யூதனால் ஏதாவது உதவி செய்யக்கூடுமானால், பிரபுவே, அவன் அத்தகைய உதவி புரிய ஒருபோதும் பின்வாங்கான் என்பதை நிச்சமாய் நம்பும்" என்று வெகு தாழ்மையாய் மொழிந்தான்.

வீரனுக்கு இந்த முகஸ்துதியான வார்த்தைகள் பிடிக்காமல், "போதும்! போதும்! ஆனால் நீ இந்த வேலை செய்வதற்கு உன் கண் குருடா, என்ன? யூதர்களாகிய நீங்கள் வெகு ஜாக்கிரதையுள்ளவர்களாயிற்றே. கண்ணாற் பார்த்தாலும் காதால் கேட்டாலும் நம்பாத ஜாதி உங்கள் ஜாதி! அந்தப் பாலம் மத்தியில் பழுதாயிருப்பதை நீ பார்க்கவில்லையா? இந்த ஆற்றைக் கடக்கவேண்டுமானால், ஒரு பூனையைப்போல் தாண்டவேண்டும் அல்லது மீனைப்போல் நீந்தவேண்டுமென்பதை யறியாயோ?" என்றான்.

யூதன்.—மெய்தான் பிரபு. ஆனால் எனக்கு வேறு வழியில்லை. நெருப்புக்குள் நுழைந்து செல்வதினும், தண்ணீருக்குள் மூழ்கிச்செல்வது மேலல்லவா? கள்ளர் என் கோவேறுகழுதையைக் கொன்று, என்னுடைய பொருளை அபகரித்து என்னையுங் குத்திக் கொன்றிருப்பார்கள். ஆனால் ஆண்டவர் என்பக்கமிருந்து என் கால்களுக்குப் பலத்தையுந் தீவிரத்தையுங் கொடுத்து உதவி செய்ததால் தப்பினேன். இல்லையேல் என் கதி அதோகதிதான்!

வீரன்.—என்ன! கள்ளர் உன்னைத் துரத்திவந்தனரா?

யூதன்.—ஆம், பிரபு, என் காலடிச்சுவடுகளைப் பின்பற்றி வேட்டைநாய்களைப்போல் என்னைத் துரத்திவந்தார்கள். ஆனால் ஒரு குறுக்கு வழியாக ஓடிவந்து இந்தப் பாலத்தைக் கடக்க முயன்றேன். இதனால்தான் அப்பாதகர் கையினின்றுந் தப்பினேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும், யௌவன வீரன் சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் மலைகளும் குன்றுகளும் நிறைந்து காடடர்ந்திருந்தது. ஆற்றங்கரையில்முதலாய் செடிகளும் புதர்களும் எப்பக்கம் நோக்கினும் வானமே தெரியாமல் அவ்வளவு அடர்த்தியாய் வளர்ந்திருந்தது. மாலைப்போதானமையால் எங்கும் நிசப்தமாயிருந்தது. இங்குமங்கும் காக்கை கூவும் சத்தமும், காற்று வேகமா யடிப்பதால் காட்டு மரங்கள் ஒன்றோடொன்று மோதி யுண்டுபண்ணும் ஓசையுமன்றி, வேறு சத்தமே கிடையாது. ஆயினும் ஏதோ புதர்களினூடு புகுந்துவருவது போல் ஒரு சிறு ஓசை இளைஞன் செவியில் வீழ்ந்து, சத்தம் வந்த மார்க்கமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான். யூதனுக்கோ ஒன்றுங் கேட்டிலது. அவன் கைகளைக் குவித்து, வீரன் காபந்தில் அவனைப் பின்பற்றி தான் வர உத்திரவளிக்கவேண்டுமென்று மன்றாடினான். அதனால்

இன்னும் அபாயம் அவனை விட்டகலவில்லை யென்று அவன் அறிந்திருந்தான் என்பது திண்ணம்.

நமது வீரன் தன் கரபலத்திலும், உடைவாளிலும் நம்பிக்கைவைத்தவனாதலால், அபாயமொன்றுமில்லையென்றெண்ணி, "ஆனால், நீ எங்கே போகிறாய்! நீயும் நானும் ஒரே பாதையாய்ப் போவோமென்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான்.

"என் ஆண்டவனே, நான் போகவேண்டிய வழி இதுதான். இப்படிப்போனால் ஒரே இடத்துக்குத்தான் போகலாம். அதாவது கார்சியாஸ் பிரபுவின் கோட்டையே. அவ்விடத்துக்கே உமது அடிமையாகிய யான் போகவேண்டியது."

வீரனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. "என்ன! யூதா, கார்சியாஸ் பிரபுவின் கோட்டைக்கா போகிறாய்? மெய்தானா? ஒரு காலத்தில் கார்சியாஸ் பிரபு உன் ஜாதியாரை, தனக்குக் கொஞ்சமும் பிடிக்காத சில மிருகங்களைப்போல் எண்ணியிருந்தாரே. அங்கே, இப்போது உனக்கென்ன அலுவல்?" என்றான்.

"பழயன கழிதல் காலத்தின் வேலை. ஆபிராகாம் குலத்தாரை முற்காலத்தில் இகழ்ந்து ஒதுக்கிய பிரபுக்கள் இப்போது அத்தகைய துர் அபிமானங்களையெல்லாம் விட்டொழித்துவருகின்றார்கள். வைரம், நகை முதலிய விலையுயர்ந்த பொருள்களை வாங்கவென்றே, நான் கார்சியாஸ் பிரபுவின் மாளிகைக்குப் போகிறேன். இதற்காக என்னைக் கூப்பிட்டிருக்கிறார்கள்" என்று மறுமொழி பகர்ந்தான் யூதன்.

என்ன சொன்னாய்? வைரம், நகை முதலியன வாங்கவா கார்சியாஸ் பிரபுவின் கோட்டைக்குப்போகிறாய்? ஏ! யூதா! நீ பொய்சொல்லுகிறாய். இந்த தேசத்தில் உள்ள பிரபுக்களில் கார்சியாஸ் பிரபுவே தனவந்தர் என்று பேரெடுத்தவர். அவர் நகைகள் வாங்குவாரேயொழிய, விற்கமாட்டார். அதுவும் ஒரு யூதனிடம் என்பதை நான் நம்பவவே நம்பேன்" என்றான் வீரன்.

"ஆண்டவனே, சற்று முன் என் உயிரைக் காத்த உம்மிடம் பொய்சொல்லி உம்மை ஏமாற்றுவதால் எனக்குண்டாகும் பலன் யாது? நான் உம்மிடங் கூறியது உண்மையே என்பதற்கு கடவுளே சாட்சி. ஒரேழையூதனைப் பின்பற்றிவருவது உமக்கு அவமானம் என்று தோன்றாவிடில், என்னோடு வாரும், நான் சொன்னது பொய்யல்லவென்று நீரே சீக்கிரந் தெரிந்துகொள்வீர்" என்றான் யூதன்.

இவ்வார்த்தைகளால் இளைஞன் மனம் ஒருவாறு திருப்தியடைந்தது. ஏதோ சிந்தனைக்குள் ஆழ்ந்தவனாய் சற்று நேரம் மௌனமாய் நின்றான். பின்னர் கார்சியாஸ் பிரபுவின் கோட்டைக்குப் போகும் மார்க்கமாய் என்ன நேரிடுமோவென்னுங் கவலையுடன் தன்னையு மீறி உற்று நோக்கினான்.

திடீரென ஒய் என்று ஒரு தொனி கேட்டது; ஓர் அம்பு அவன்முன் சென்றதைக் கண்டான்; கண்ணிமைப்பொழுதில் இரண்டாவது அம்பு முதலாவதைப் பின்பற்றிவந்தது. அது குறிப்பிசகாமல், தன் எஜமான் பக்கத்தில் மேய்ந்துகொண்டிருந்த குதிரையின் கழுத்தில் பாயவே, அப்பரிமா காயம்பட்டு அப்படியே நின்றவிடத்தில் விழுந்துவிட்டது. அதே சமயத்தில் மூன்று திருடர்கள் ஆயுதபாணிகளாய்ப் புதர்களை விலக்கிக்கொண்டு இரண்டு பிரயாணிகள்மேலும் பாய்ந்தனர். யூதன் பயத்தால் கூவினான்; ஓடப்பார்த்தான். ஆனால் திகில் அவன் கால்களை மடக்கிவிட்டது; பயத்தால் அவன் மூர்ச்சையாய்க் கீழே விழுந் தருணத்தில், ஒரு கள்ளன் அவனைப் பிடித்துக்கொண்டான். அத்திருடர் எதிர்த்த விதமானது திடீரெனவும், எதிர்பாராததுமா யிருந்தபடியால், நமதிளவல் தன் உடைவாளை எடுத்து யூதனைக் காப்பதற்குப் போதிய அவகாசமில்லை; அச்சமயம் தன் கைக்குவந்த தலைச்சீராவைக் கழற்றி தன் பலத்தையெல்லாங்கொண்டு வீசி யெறிந்தான். அது போன வேகத்தில் ஒரு கள்ளன் தலைமேற் பட்டு, அவ்னுயிரை வாங்குங் கருவியாயிற்று. பிறகு மின்னலைப்போல் ஒரு நொடியில் தன் உடைவாளை உரையினின்றும் வாங்கி காப்பில்லாத் தன்சிரத்தின்மேல் மற்றொரு கள்ளனால் அடிக்க இருந்த அடியைத் தக்க சமயத்தில் தடுத்துவிட்டான். அக்கள்ளன் மீண்டும் அடிக்க முயன்றான், ஆனால் நமது வீரன் அதையும் தடுத்துத் தன்னைக் காப்பாற்றிக்கொண்டதுமன்றி, தன் வாளால் அவன் மார்பு பிளக்கும்படிக் குத்தினான். இவற்றைப் பார்த்திருந்த மூன்றாவது கள்ளன், வீரன்முன் தன்னாட்டம் பலிக்காதென்று நன்கறிந்தவனாய், முன்பின் பாராமல் வந்தவழியே திரும்பி ஓட்டம்பிடித்தான்.

(இன்னும் வரும்.)

ச. செல்வன்.

உன்னை வார்த்தையினாலேயும் கிரியையினாலேயும் துன்பப்படுத்துகிறவர்களோடு மதுர குணத்தோடு பேசி அவர்களை சர்வேசுரனிடத்தில் சேர்ப்பாயாக.

உனதாத்துமங் கலங்கியிருக்கும்போதும் கோப மெழும்பியிருக்கும்போதும் கலக்கத்தினாலும் கோபத்தினாலும் உனக்கு அனேக பாவங்கள் வாராதபடிக்கு கலக்கம் கோபம் மாறுகிறவரையில் பேசாமல் மவுனமா யிருப்பாயாக.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தராவாதியல்லர். ப—ர்.]

பரத மஹாராஜன சங்கம்
தூத்துக்குடி.

ஸ்ரீமான் I. X. பெரைரா அவர்களுடைய சபாநாயகத்தின்கீழ் நாளது 1920ஹு மேமீ 9உ ஞாயிற்றுக்கிழமை, இவ்வூரில் ஷெ சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர் கூட்டம் ஒன்று கூடப்பெற்றது. அதில், 5—8—20ல் நடைபெறவிருக்கும் பரத மஹாராஜன சங்க முதற் பொதுக் கூட்டத்திற்கு காப்டன் லெயோ S. மச்சாது I. M. S. அவர்களை அவைத்தலைமை வகிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டது. 27 பேர்கள் அடங்கிய ஓர் பிரதி உபசரணைக் கமிட்டிக்கு ஸ்ரீமான் I. X. பெரைரா அவர்கள் அக்கிராசனம் வகிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

இதனடியிற்கண்ட காரியங்களை நடத்துவதற்காக வேறு பல கமிட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன.

1. சங்க விதிகள் ஏற்படுத்தல்.
2. 5—8—20ல் நடைபெறவிருக்கும் சங்கத்தின் முதற் பொதுக் கூட்டத்திற்கு நிதி சேகரித்தல்.
3. சங்கத்தின் பிரசார வேலைகளை நம் ஜன சமூகத்திற்கு சவிஸ்தாரமாய் தெரிவித்தல்.

இராயபுரம்.

சங்கைக்குரிய பத்திராதிபரவர்களுக்கு!

சென்றமாத நல்ல ஆயனில் என் மனதுக்குகந்த சிற்சிற நல்ல விஷயங்கள் இருக்கக்கண்டு அவைகளின் தொடர்ச்சியாக இதனை எழுதலானேன்.

திரேகத்தின் எந்தப் பாகமேனும் வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கும்போது பூரண சுகங் குறைந்து மற்றெல்லாப் பாகங்களும் வருந்துவதுபோல் கத்தோலிக்கு இந்தியர் என்றழைக்கப்படுவோருக்குள் மேல் கீழ் என்ற வித்தியாசம் பாவிக்கிடப்பதால் கீழானோர் படும் பாடு அன்னோரை வருத்தித் தாழ்த்துவதல்லாமலும், உயர்ந்த ஜாதிக் கத்தோலிக்கரின் மனச்சமாதானத்தை மிகுதியுங் குறைத்துச் சிதைக்கின்றதென்பது மறுக்கக்கூடியதன்று.

கல்லான மனமுங் கரையும்படியான புண்ணிய தருமங்களைப் போதிக்குஞ் சத்திய கத்தோலிக்கு வேதத்தி லுட்பட்டோர் தாங்கள் இந்துக்களாயிருக்கையில் காட்டியுள்ள ஜாதி வைராக்கியத்தை விட்டுவிடாமல் இன்னும் பிடிவாதமாயிருக்கலாமா? ஒரே வேதத்தை யனுசரிக்கிறவர்கள் ஒருவருக்கொருவர் பின்னபேதம் பார்ப்பதானால் இதர மதஸ்தர்முன் தமக்குள் ஒற்றுமையுண்டென்று எவ்விதம் ஸ்தாபிக்க முடியும்?

இவ்விதமெல்லாந் தர்க்கங்கூற இடமுண்டென்றபோதிலும் கத்தோலிக்குக் கிறீஸ்தவர்களில் மேற்சாதியென்னப்படுவோர் தாம் காட்டுஞ் சாதி வைராக்கியத்தை விட்டுவிடவேண்டுமென்று யாரேனும் எடுத்துப்பேச என்ன நியாயமிருக்கிறது? தாழ்ந்தோர் எவ்வகைக் கஷ்ட நஷ்டங்களனுபவித்தபோதிலும் நியாயத்தைமட்டும் மறந்துவிடக்கூடாது. நியாயம் என்ன?

கத்தோலிக்கர் ஜாதிபேதம் பார்ப்பது அப்பேதம் பாராதிருப்பதினால் ஏற்படும் புண்ணியத்தைமட்டும் இழக்கச்செய்கிறதேயன்றி எவ்வகைப் பாவத்துக்குங் காரணமாகவோ, அல்லது, ஆத்தும இரட்சண்யத்துக்கு விக்கினமான இடையூறாகவோ இருப்பதில்லை. இதனால்தான் குருக்கள் கன்னியாஸ்திரிகள்முதலாய் ஜாதிபேதத்தையொழித்துவிடவேண்டுமென்று வற்புறுத்துகிறதில்லை. நிற்க, அயல் நாடுகளில் கத்தோலிக்கரெல்லோரும் ஒரே அரசாங்கத்துக்குட்பட்டிருக்கக்கூடாமலும் கடமைப்பட்டில்லாமலு மிருப்பதுபோல் இந்திய கத்தோலிக்கர் ஒரே ஜாதியாராய் அல்லது ஜாதியில்லாதவராயிருக்கவேண்டியதுமில்லை. இன்னும், மொத்தத்தில் முக்காலுக்கு மேலிருக்கும் இந்துக்களின் முகத்தை முறிக்காமலிருக்கவும் அவர்களுடைய உதவி ஒத்தாசைகளைத் தாராளமாய்ப் பெறவும் ஏதுகரமாயுள்ள ஜாதி சுதந்தரங்களை யிழக்க மேற்சாதி கத்தோலிக்கர் இலகுவில் இணங்குவார்களா?

என்றாலும், கத்தோலிக்கரில் தாழ்ந்தோர் அனுபவிக்குங் கொடிய கஷ்டத்தை மேலோரானவர் பார்த்துக்கொண்டிருப்பதும் நியாயமாகத் தோன்றவில்லை. ஆனால் பிறர் அக்கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமென்று என்ன கட்டாயமுண்டு? கஷ்டப்படுவோரே தங்கள் நிர்ப்பாக்கியத்துக்குக் காரணங் கண்டுபிடித்து அதனையொழிக்கப் பிரயாசப்படுவார்களானால் அதுவே சர்வேசுரனுக் குகந்ததும் தங்களுக்கு நீடித்த பலனைத் தரக்கூடியதுமான உத்தம வழி. இவ்வித சுயபிரயாசையில்லாதிருக்குமாயின் நமது தேசத்தில் நிறைந்து குவிந்துகிடக்கும் இந்துக்களெல்லோரும் ஏகோபித்து ஜாதிபேதத்தை நீக்கியொற்றுமையாயிருக்க நேரும்வரை தாழ்ந்தோர் தாழ்ந்தோராகவேயிருக்கவேண்டும். இவ்விதப்

பிரமாத மாற்றத்தை யெதிர்பார்த்துக்கொண்டிராமல் சொற்பமாயிருக்கும் நாம் நம்மைச் சீர்திருத்திக்கொள்ள முயற்சி செய்வோமாயின், நம்முடைய சிறிய தொகைக்கு அளவாய் சொற்பகாலத்தில் முன்னேற்றமடைந்து, நம்மில் வெறுப்புக்கிடமாயிருக்குங் குறைகள் மறைய, இனி தீண்டா வஸ்துக்கள்போலிராமல் மானிட வர்க்கத்திலோர் பாகத்தினராவோம்.

அந்தோ! கத்தோலிக்கரில் தாழ்ந்தோர் மூற்றெந்த மதத்தினரிலுள்ள தாழ்ந்தோரைவிடத் தாழ்ந்தோராயிருக்கிறார்கள். இந்துக்களில் தாழ்ந்தோரோவெனில், தங்களுடைய நிலமையை வேத முறைமையாகக் கொள்வதனால் முறுமுறுக்க வழியற்றிருக்கிறார்கள். அவர்களிலும் அந்தரங்கமறிந்தோர் முன்வந்து தங்கள் இனத்தவரின் குறைகளைத் தீர்க்க முயன்றதால் சர்க்கார் உதவி பெற்று, அக்குறைகளை சர்க்காருக்கு வெளியிடவும், வேண்டிய நிவாரணம் பெறவும் சென்னை சட்ட நிரூபண சபையில் தற்போது ஒரு அங்கத்தினரையும், இனிமேலாக ஐந்து அங்கத்தினர்களையுந் தங்களுடையவர்களாய்க் கொண்டிருக்கிறார்கள். புரொடஸ்டாண்டு வேதம் முதல் முதல் தாழ்ந்தோரையே யடுத்ததினால் அன்னோர் இப்போது முன்னேற்றமடைந்து, சகலராலும் நன்கு மதிக்கப்பெற்றிருப்பதுடன் தங்கள் சமயத்தவர்க்குள்ளேயே வேரூன்றியிருக்குஞ் சகோதரத்வத்தில் சமமான பதவியடைந்து மிருக்கிறார்கள். ஆனால், கத்தோலிக்கரில் நெருக்கப்பட்டோரோவெனில், யாதாமொரு ஆறுதலுமின்றி தனித்து நிற்கிறார்கள். இவர்களுடைய நிர்ப்பாக்கிய நிலமையைச் சீர்திருத்த முன்வருவோர் யாருமில்லை. சர்க்காரில் மந்திரி ஸ்தானத்துக்கு நெருங்கிய பதவியை யடையப் பாக்கியம்பெற்ற சில கத்தோலிக்கு மேதாவிகள் முதலாய் தங்களின் தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்காக யாதொன்றுஞ் செய்யாதிருக்கிறதை நோக்குகையில் பிறர் உதவியைத் தேடுவது எவ்வளவு வியர்த்த மென்பது உறுதிப்படுகின்றது.

ஒரு நாட்டில் வேதத்தைப் போதிப்பதற்கு விக்கினம் நேரிடாவண்ணம் அரசாங்கத்தவரின் அனுமதியும் உதவியும் அவசரமாயிருப்பன போல், முன்னேற்றத்தை நாடுபவர்கள் அம்முன்னேற்றத்திற்கு ஏற்ற சாதனங்களைக் கைக்கொள்ளவுங் கையாடவுஞ் சிற்சில உதவிகள் சர்க்கார் மூலியமாய்மட்டுங் கிடைப்பனவானதால் அவ்வுதவிகளைத் தடையின்றிப் பெறவும், குறைகளை யெடுத்துக்காட்டி நிவாரணங் கேட்கவும் தங்களுக்கென்று பிரத்தியேகமாய் ஒரு அங்கத்தினர் தேச சட்ட நிரூபண சபையில் நியமனஞ்செய்யப்படவேண்டும். ஆனால், இனத்தவரின் குறைகளைக்கொண்டு கியாதி பெற விரும்புஞ் சதி துரோகிகளுக்கு ஐயோ கேடாம்! தற்சிந்தையில்லாமல் இனத்தவரின் பொது நலத்தையே தனது உயிராகக் கொண்டிருக்கும்படியான மனிதன் முன்னேற்றம் நாடுபவர்களுள் இல்லாதிருந்தால், புது அரசியல் சீர்திருத்தத்தில் கிறீஸ்துவர்களுக்கென்று ஏற்பட்டுள்ள ஐந்து ஸ்தானங்களில் ஒன்றைவகிப்போர் எச்சாதியாரானாலும் நெருக்கப்பட்ட கத்தோலிக்கருக்காகவென்று சர்வ ஜாதிக் கத்தோலிக்கராலும் நியமனமாகி அங்கீகரிக்கப்படுவது தருமத்திற் சிறந்ததாகும். ஆனால், நெருக்கப்பட்டோரி லொருவரே நியமிக்கப்படுவாரானால் அதிகமாயில்லாவிடினுங் கொஞ்சமாயாவது தம்மினத்தவர்கள்பால் ஊக்கங்காட்டி, அவர்களுடைய விசுவாசந் தளராதிருக்க முயலுவார்.

இவ்விதப் பிறர் சிநேகத்துக்கடுத்த ஏற்பாடு செய்யப்பட்டாலுமோ, தவறிப்போனாலுமோ நெருக்கப்பட்ட கத்தோலிக்கர் தங்கள் முன்னேற்றத்தை இலகுபடுத்துவதற்குக் கவனிக்க வேண்டிய சில காரியங்களுள் முந்தியது மதுபானத்தை விலக்குவதே. ஏற்கெனவே மதுபானஞ் சாப்பிடும் அப்பியாசத்தில் முதிர்ந்திருப்போர் தங்களைச் சீர்திருத்திக்கொள்ளக்கூடாதவர்களாயிருப்பார்களாயின், தங்கள் பிள்ளைகள் இன்னுந் தங்களைச்சேர்ந்த சிறுவர்களேனும் அவ்விதத் துர்ப்பழக்கத்தைக் கையாடாதிருக்கவேண்டிய முயற்சிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வுலகில் பணத்தாலோ குணத்தினாலோ ஒருவனைப் பெரியவ னென்கிறோம். பணத்தைக் கொள்ளைகொண்டுபோவதுடன் குணத்தையுங் கெடுத்து வைக்கும் மதுபானத்தை நமது ஜென்ம சத்துருவாகவல்லோ வெறுக்கவேண்டும். குடியன் பகலெல்லாங் குடிவெறியில் மனந் தடுமாறியிருக்கிறான்; இரவில் தன் குடிவெறிபோக நன்றாயுறங்குகிறான். ஆகவே, நாள் முழுதுந் தன் மதியற்றிருக்கிறவன் எவ்விதந் தன்னுடைய குறைகளை யூகித்து அவைகளை நீக்குவதற்கான வழிகளைத் தேடக்கூடும்?

இன்னும், ஆண்கள் படிக்க முன்வருவதுடன் பெண்பிள்ளைகளுங் கல்வியிற் தேர்ச்சியடையுமாறு செய்யவேண்டும். அவர்களுக்கு அதிகப் படிப்பு அவசரமில்லையானாலுங் கொஞ்சமென்கிலும் படிப்பில்லாதிருத்தல் பெரிய குறையாகும். கற்ற பெண்பிள்ளைகள் நடையுடை பாவனையில் நாகரீகமடைகிறார்கள். பின் தாய்மார்களாகும்போது தங்கள் பிள்ளைகளையும் நாகரீகமான பாதையில் நடத்தி, நல்ல பிள்ளைகளாயொழுகச்செய்கிறார்கள். சாதாரணமாய் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் நல்லொழுக்கமுடையோரெனக் கருதப்படுகிறார்கள். ஆகவே நல்லொழுக்கமுடையோர் எச்சாதியினராயிருந்தாலும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு, உயர்ந்த குலத்தவராய்த் தானிருக்கவேண்டுமென்று மதிக்

கவும்படுவார்கள். இவ்வொழுக்கத்தைக் கல்வியினுதவியால் பெறலாமென்றாலுஞ் சிறு பருவத்திலேயே அதில்பழக்கப்பட்டில்லாவிடின் அதனை அனுசரித்தல் சற்றே கடினமாகும். ஆனதுபற்றி தாய்மார்கள் கல்விகற்று ஒழுக்கத்தின் பயனை யுணர்ந்தவர்களாயிருப்பின் ஒழுக்கமுங் குடும்பத்துக்கு இலக்ஷணமுமுள்ள பிள்ளைகளை யுடைத்தாயிருப்பார்க ளென்பதற்குச் சற்றேனு மையமில்லை.

சில கிராமங்களில் நெருக்கப்பட்டோரைச் சேர்ந்த பெண்பிள்ளைகளுக்காக குருக்களாலுஞ் சர்க்காராலும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பனவென்றாலும், பெற்றோர் பிள்ளைகளை அனுப்பாமல், பெண்பிள்ளைகள் படித்துத்தான் நிறையப்போகிறதோவென்று தர்க்கம்பேசுகிறார்கள். கற்றவனொருவன் தப்பிதஞ்செய்தால் "நீ படித்திருந்தும் இப்படிச் செய்யலாமா" என்று பிறர் அவனைக் கேட்பதுண்டு. ஆகவே, கல்வியானது நன்னடக்கையைத் தருமென்று அர்த்தமாகிறதல்லவா? பெண்பிள்ளைகள் கற்புடையவர்களாயும்,நன்னடக்கையுள்ளவர்களாயு மிருக்க வேண்டுமென்று விரும்புகிற நாம், அவர்கள் நல்லவர்களாயிருக்க மிகுதியும் உதவியாயிருக்குங் கல்வியைக் கொடுக்காமல், அவர்களிடமாய் நன்னடக்கையை யெதிர்பார்ப்பது நியாயமாமா? கற்பதற்குவேண்டிய புத்தி அவர்களுக்கில்லையா?

"இனத்தவரிதனை யிகழா தேற்ப
ரென்றே நம்பிடும்"

17—4—1920. S. M. GNANAPRAGASAM.

இந்திய கத்தோலிக்கரும் கப்பலோட்டும் வித்தையும்.

இந்திய கிறீஸ்துவர்கள் பெரும்பான்மையோர் வெகு ஏழைகளாயிருப்பதையறிந்து: அவர்களின் வறுமையை நீக்கி நாளடைவில் அவர்கள் மேம்பாடடைவதற்கான வழிவகைகளை அவர்களுக்கு எடுத்துக்காட்டி, அவ்வழிவகைகளை அவர்கள் கையாடி விர்த்தியடையும்படி கடந்த 15, 16 வருஷங்களாக நான் பிரயாசைப்பட்டுவருகிறேன். இவர்கள் முன்னேற்றம் அடைவதற்குச் சுலபமான வழிகளில் ஒன்று கப்பலோட்டும் வேலை.

இந்தியர்களுக்குக் கப்பலோட்டும் வேலையைக் கற்றுகொடுப்பதற்காக, ஓர் ஏற்பாடு செய்யும்படி இந்திய கவர்ண்மென்றார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இது நம்மெல்லோருக்கும் சந்தோஷத்துக்குரிய விஷயமல்லவா? இந்திய மாலுமிகளுக்குக் கப்பலோட்டும் கல்வியின் பிரதம விஷயங்களைக் கற்றுக்கொடுக்கவும், இன்னும் இந்தியர்கள் கப்பலோட்டும் வித்தையைச் சாஸ்திர ஆராய்ச்சிப்பிரகாரம் பழகிக்கொள்ளும்படியாகவும், இதற்காகப் பிரத்தியேகமான ஓர் கலாசாலை ஏற்படுத்தலாமெனப் பங்காள தேசத்துச் சர்க்காருக்குச் சில காலமாக எண்ணமிருந்து வருகிறது. வியாபாரக் கப்பல்களில் உயர்ந்த உத்தியோகங்கள் வகிப்பதற்கான திறமையை அடைவதற்கு அவசரமான படிப்பைக் கற்றுக்கொள்ள, இந்தியர்களுக்குத் தகுந்த ஏற்பாடு ஒன்றும் இராஜதானியில் கிடையாது. ஐரோப்பா தேசத்தில் இருக்கும் மாலுமிக் கலாசாலைகளைப் போல், இங்கும் ஒன்று ஏற்பாடாகுமானால், மத்திமப்படிப்புமட்டுமுள்ள அநேக இந்தியருக்கு இது வெகு பிரயோஜனமாயிருக்கக்கூடுமென்பது கவர்னர் ஜெனராலுடைய அபிப்பிராயம். கல்கத்தாவில் இத்தகைய கலாசாலையை ஒருவரும் விரும்பக்காணோமென்று சர்க்காருடைய விசாரணையால் தெரியவந்திருந்தாலும், இப்போது அதைப்பற்றித் தீர்க்க விசாரிப்பது உசிதமாயிருக்குமென்று கவர்னர் ஜெனரல் நினைக்கிறார். இது ஆழ்ந்துயோசிக்கக்கூடிய விஷயம். முதன் முதல், கல்கத்தாவில் அதற்கான நோக்கம் இருக்கிறதாவென ஆய்ந்து பார்க்கவேண்டும். அதன் பின், எப்பேர்ப்பட்ட அப்பியாசங்களைக் கற்றுக்கொடுப்பது, எத்தனை பிள்ளைகள் சேரக்கூடும், தேர்ச்சியடைந்தவர்களுக்கு வேலை கொடுக்கச்சம்மதிக்கும் கம்பெனிகள் எவை, இத்தகைய அலுவலுக்கு ஏற்கனவே இருக்கவேண்டிய படிப்புத்திறமை யாது என்பதாக நுணுநுணுக்கமாய்ப் பரிசோதித்துப் பார்க்கத்தகும். பங்காளதேசச் சர்க்கார் இவ்விஷயத்தைச் சரியாய் சீர்தூக்கிப் பார்ப்பதற்கென்று பம்பாயிலும், சென்னையிலும் ஏற்கெனவே செய்திருப்பதுபோல், ஓர் கமிட்டியை நியமித்து அவர்கள் இதைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

சென்னை கவர்ண்மென்றாரும் இந்த ஏற்பாட்டைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பது இதினின்று தெளிவாய் விளங்குகிறதல்லவா? நமது இந்திய கிறீஸ்துவ வாலிபர்கள் காலத்தை க்ஷேமமாய்ச் செலவழித்துச் செல்வாக்குள்ளவர்களாகி உன்னதபதவி அடைவதற்கு இது ஓர் தகுந்த சாதனமாயிருக்குமாதலால், நமது வாலிபர் பெருந்தொகையினராய்ச் கப்பல் வேலை உத்தியோக முறைகளில் பழகுவதற்காக முன்னேறி வரவேண்டும். இத்தகைய நோக்கத்தை (அதாவது மாலுமிக்கலாசாலையை ஏற்படுத்த வேண்டுமென்ற) விரும்பி ஆசிக்கிறவர்கள் கிடையாது என்பது இந்திய கவர்ண்மென்றாருடைய உத்தேசம். ஆகையால், நமது கத்தோலிக்குச் சங்கங்களும், கிறீஸ்துவ சங்கங்களும் இது காரியத்தை நன்றாய் விசாரித்தறிந்து, கப்பலோட்டும் கல்வியைக்கற்று, அவ்வேலையில் பழகு

வதால் வரக்கூடிய லாபம் ஏராளமானதென்பதை நம்மவர்க்கு எடுத்துக்காட்டி, அநேகர் இத்தொழிலைக் கற்றுக்கொள்ளும்படி ஏவித் தூண்டவேண்டும். இதற்காக, ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள கத்தோலிக்கச் சங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, இதிலிருந்து நாலைந்து தகுதியான பேர்வழிகளைத் தெரிந்தெடுத்துக் கடற்கரையோரமாயுள்ள பட்டணம் கிராமங்களுக்கனுப்பி, அவ்விடங்களிலுள்ள வாலிபரில் 14 வயது துவக்கி 35 வயதுமட்டுமுள்ளவர்கள் பெருந்தொகையினராய் இதில் சேரும்படி அவர்களுடைய பெயரைப் பதிவு செய்துவரவேண்டும் (விசேஷமாய்ப் பரவர், செம்படவர் முதலாயினோர் இதற்குத் தகுதியானவர்களாயிருப்பார்கள்). உயர்தரக் கல்வி கற்றவர்களிலும் அநேகர், கப்பித்தான், பிரதம ஆபீசர் என்னும் கப்பல் உத்தியோகங்களில் அமர்வதற்கு ஆக்ஷேபிக்கமாட்டார்கள். தூத்துக்குடி, நாகப்பட்டணம், காரைக்கால், தரங்கம்பாடி, கூடலூர், புதுச்சேரி, சென்னை முதலான இடங்களிலிருந்து இத்தகைய கலாசாலையில் படிக்கக்கூடியவர்கள் ஏறக்குறைய 5,000 பேர் அகப்படுவது அருமையல்ல. இது தேசக்ஷேமத்தைச்சார்ந்த விஷயமானதுபற்றி, இது அநுகூலமாய் முடியும்படி என்னென்ன சிரமப்படவேண்டியிருந்தாலும், பின்வாங்கலாகாது. போதுமான பேர் சேர்வார்களென்று தெரிந்ததும், மாலுமிக் கலாசாலையை ஸ்தாபிக்கும்படி மாகாண அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்கவேண்டும். இந்தக் கலாசாலை நிலைபெற்றுப் பிரயோசனப்படுமோவென்ற சந்தேகம் சர்க்காருக்கு ஏற்பட்டிருப்பதால், அநேகர் இத்தொழிலைக் கற்றுக்கொள்ள ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்களென்று நாம் காட்டவேண்டும். இவ்விதம் செய்வதால், நமது பிள்ளைகள் கப்பலோட்டும் வித்தையைக் கற்றுத் தாங்கள் மேம்பாடடைவதுமன்றி, உலகில் கீர்த்திபெற்று விளங்கும் தேசங்களில், நமது தேசமும் ஒன்றாகப் பாவிக்கப்படுவதற்கான வழியாகும். இந்தியாவிலுள்ள கப்பல்கள் இந்திய இஞ்சினீர்களால் ஓட்டப்பட்டு, இந்திய கப்பல் தலைவர்களால் நடத்தப்படும் நாள் என்றைக்கு வருமோ, அன்றுதான் நாம் மெய்யாகவே பெருமை பாராட்டலாம். போர்க்கப்பல் வேலைகளுக்கு இந்தியரையும் நியமிக்கும்படி சர்க்காரிடம் கேட்கவேண்டும்.

தற்காலத்தில், இந்தியாவிலுள்ள ஐரோப்பிய கம்பெனியாரால் உபயோகிக்கப்பட்டுவரும் சகல கப்பல்களிலும், சிட்டகாங்கிலுள்ள செம்படவர் வகுப்பைச்சேர்ந்த மகம்மதியர்களே அநேகமாய் வேலை பார்த்துவருகிறார்கள். பர்மாவில், "இராவடி பிளோடில்லா" என்ற கம்பெனியாருக்குச் சொந்தமான கப்பல்களில் இம் மகம்மதியர் தான் பெரும்பாலும் பிழைத்துவருகிறார்கள்; இவர்களிற் சிலர் தலைமை உத்தியோகமும் வகித்து, வெகு திருப்திகரமாய் வேலை செய்து வருகிறார்கள். இந்தியாவில் கவர்ண்மெண்ற் கிளார்க் வேலையிலிருக்கும் அநேகரை விடச் சிட்டகாங்கிலுள்ள மகம்மதியர் அதிகச் செல்வாக்குள்ளவர்களாய் விளங்குவதற்கு இது தான் காரணம்.

P. சாம்சோன்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும், குறிப்புக்களும்.

ஒரு சர்வகலாசாலை. — இரங்கூனில் ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்கான ஒழுங்குகள் இங்கிலாந்திலுள்ள இந்தியா ஆபீசு செக்ரெட்டரியால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன. கூடியசிக்கிரத்தில் வேலை ஆரம்பிக்கப்படுமென்று கோரப்படுகிறது.

வெற்றி மாளிகை.—சென்னைக் கவர்ணர் தோட்டத்தில் கட்டப்படும் வெற்றி மாளிகையின் செலவுக்காக சிவகங்கை ஜமீன்தார் அவர்கள் ரூ. 50,000 நன்கொடையளித்திருக்கிறார்கள். இந்த நிதிக்காக இதுவரையில் கொடுக்கப்பட்ட தொகைகளில், இந்த சிவகங்கை ஜமீன்தாரர் தொகையே மிகப்பெரிது.

சர்வதேச ஸ்திரிகள் மகாநாடு.—இம்மாத மத்தியில் சுவிட்சர்லான்டிலுள்ள ஜெனிவாநகரத்தில் கூடப்போகிற சர்வதேச ஸ்திரிகள் மகா நாட்டிற்கு இந்திய ஸ்திரிகளையனுப்புவதற்கான ஏற்பாடு மிஸஸ். சரோஜினி நாயுடு செய்து வருகின்றனர் என்று இந்து பத்திரிகைக்கு வந்த தந்தியொன்றால் தெரியவருகிறது. சுவிட்சர்லான்டுக்கு அநேக முக்கிய சீமாட்டிகள் செல்வார்களென்று சொல்லப்படுகிறது.

அர்ச். ழான் தார்க்கம்மாள்.—சென்ற மேமீ 16-ம் தேதியன்று உரோமாபுரியில், முத்திப் பேறு பெற்ற ழான் தார்க்கம்மாளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுக்குஞ் சடங்கு வெகு ஆடம்பரமாய் நிறைவேறிற்று. இந்த அர்ச்சியசிஷ்டவள் பிரான்சைச் சேர்ந்தவளாகையால் அச்சடங்குக்கு பிரென்சுக்காரர்கள் ஏராளமாய் வந்திருந்து அதை ஆரவாரமாய்க் கொண்டாடினார்கள்.

சின்பீனர்களின் கட்சி.—ஐயர்லாந்தில் சுய ஆட்சிக்காகக் கலகம்பண்ணிக்கொண்டிருக்கும் சின்பீனர்கள், டொமினியன்களுக்கிருக்கும் சுதந்தரம் தங்களுக்கும் இருக்க வேண்டுமென்றும், அல்ஸ்டருக்கும் ஸ்தல சுய ஆட்சி கொடுக்கப்படவேண்டுமென்றும், பிரிட்டனுடன் நிபந்தனையில்லாத வியாபாரம் ஏற்படவேண்டுமென்றும், ஐரிஷ் கவர்ன்மெண்ட் பிரத்தியேகமா யிருக்கவேண்டுமென்றும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைக் கேட்பதாகத் தெரிகிறது.

"ஐயர்லாண்டில் குடியரசு."—அமெரிக்காவைச்சேர்ந்த "யுனைடெட் ஸ்டேட்ஸ்" என்னும் ஐக்ய மாகாணத்தின் அயல் நாட்டு மந்திரியான மிஸ்டர் போர்டன் நியூயார்க் செக்ரெட்டரி ஆப் ஸ்டேட்டுக்கு எழுதிய கடிதத்தில், யுனைடெட் ஸ்டேட்ஸ் அயர்லாந்து குடியரசை அங்கீகரிப்பதனால் இங்கிலாந்துக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கும் ஒருவிதமான பாதகமும் நேரிடக்கூடாதெனக் கூறியிருக்கிறாரென்று, நியூயார்க்கிலிருந்துவந்த தந்திசமாசாரத்தினால் தெரிய வருகிறது.

ஒரு பெரிய நன்கொடை.—குஜராத் மாகாணத்தில் இந்தியப் பெண்களுக்கு சர்வ கலாசாலை யொன்று ஏற்படுத்துவதற்காக, சர் வித்தல்தாஸ் என்பவர் 15 லட்சம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார். இந்த 15 லட்சத்துக்கு வட்டி ரூபாய் 50,000 வருஷாந்தரம் கிடைக்கப்படுமென்றும், இதில் மூன்றிலொருபங்கே செலவழிக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது. சென்னையில் மாணுக்கர்களுக்கு ஒரு விடுதியையாவது ஏற்படுத்த கத்தோலிக்கருக்குள் வித்தல்தாஸ் யாருமில்லையோ?

பீ. ஏ. ஆனர்ஸ் பரீட்சை.—இந்த பரீட்சைக்கு திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையிலிருந்து போனவர்களில் கிறீஸ்துவர் நால்வர் தேறினார்கள். இவர்களில் மூவர் மலையாளிகள். மற்றொருவர், கர்னூல் ஜில்லா, போளூர் விசாரணையைச் சேர்ந்த ஒய். பால்ரெட்டி எனப்படுவோர். நமது கத்தோலிக்கு இந்தியர்களில் இவ்வாறு பீ. ஏ. ஆனர்ஸ் பரீட்சை கொடுத்தவர்கள் வெகு அருமையாயிருக்கிறார்கள். இத்தகையினோர் தொகை பெருக்கமடைவது எக்காலமோ?

ஒரு குருவானவரின் மரணம்.—புதுவை, அரியாங்குப்பத்து விசாரணை குருவாகிய சங். எம். லசார் சுவாமிகள் தம்முடைய 61-வது பிராயத்தில் சென்றமீ 26-ந் தேதி தேகவியோகமாயினார்களெனக் கேள்வியுற்று மிக்க விசனிக்கிறோம். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள எமது சந்தாதாரர்களனைவரையுங் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மாணுக்கருக்கு உபகாரச் சம்பளம்.—தென்னிந்தியா கத்தோலிக்கு இந்தியர் சங்கத்தின் சென்னை நகர்க்கிளைச் சங்கத்து கௌரவ காரியதரிசி எழுதுகிறார்: "சென்னை நகர்க்கிளைச் சங்கத்து அங்கத்தினர் பிள்ளைகளில் யாராவது ஒருவருக்கு, நான்காவது பாரத்திலிருந்து இந்த வருடந்தொடங்கி மூன்று வருஷங்களுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். அதைப்பெற விரும்புவர்கள், சென்னை, வேப்பேரி, வடமலைப் பிள்ளைத்தெரு, 2-வது கதவிலக்கமுள்ள கௌரவ காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்".

தபால் விளம்பரம்.—தபால் மூலமாய் அனுப்பப்படுகிற காகிதம், பார்சல் முதலிய சாமான்களின்பேரில், அவை சேர்ப்பிக்கப்படவேண்டியவர்களின் விலாசத்தோடுகூட, அனுப்புக்கிறவர்களின் விலாசமும் குறிக்கப்படவேண்டுமென்ற தபால் உத்திரவை, போஸ்ட் அண்டு டெலிகிராப் டைரக்டர் ஜெனரல், பொது ஜனங்களுக்கு நினைப்பூட்டுகிறார். இந்த விவரமில்லாதபடியால் பிரதி வருஷமும், டெட்லெட்டர் ஆபீசில், அநேக ஆயிரங் கடிதங்கள் கொளுத்தப்படுகின்றனவென்று சொல்லுகிறார். இதை நம் நண்பர்கள் கவனிப்பார்களாக!

துருக்கி இராஜ்ஜியம்.—யுத்தத்திற்கு முன் துருக்கியின் இராஜ்ஜியம் இருபது லட்சம்சதுரமைல்கள் கொண்டதாயிருந்ததென்றும், இப்பொழுது, அதாவது உடன்படிக்கையானபிறகு, அது ஆயிரம் சதுர மைல்களே கொண்டிருக்கின்றதென்ற, இந்த வியாசத்தைப்பார்த்தால் எவர்தான் மனங் கலங்காமல் இருக்கமாட்டுவார் என்றும் "தேசபக்தன்" பத்திரிகை அநுதாபப்படுகிறது. துருக்கி அநியாயமாய் யுத்தத்திற் கலந்தபொழுதும், ஆயிரக்கணக்காய் அர்மீனியரை அதஞ் செய்தபொழுதும்

அவர்களுக்காக அநுதாபப்படுவார் ஒருவரு மில்லாமற்போயினரே?

அடுத்த இராஜப் பிரதிநிதி.—லார்ட் செம்ஸ்போர்டுக்குப்பிறகு யார் இராஜப் பிரதிநிதி ஸ்தானத்துக்கு வரப்போகிறார் என்பதைப்பற்றி பலவிதமான வதந்தி யுலாவிவருகிறது. லார்ட் ரொனல்ட்ஷே, லார்ட் வில்லிங்டன், லார்ட் செல்போர்ன், லார்ட் ஐலிங்டன், லார்ட் எல்ஜின், லார்ட் சின்ஹ ஆகிய இவர்களில் யாராவது வருவார்களென்றும், ஆனால் லார்ட் ஐலிங்டன் நியமிக்கப்படுவதையே இந்தியா ஆபீசு செக்ரெட்டரியான மிஸ்டர் மாண்டேகு ஆதரிக்கிறாரென்றும் சிவில் அண்டு மிலிட்டரி கெஜட் பத்திரிகை கூறுகிறது.

ஹண்டர் கமிட்டி ரிப்போர்ட்டு.—அமிர்த சரஸ், ஜாலியன் வாலா முதலிய விடங்களில் நடந்த கலகத்தைப்பற்றி விசாரித்து அறிக்கை செய்வதற்காக மிஸ்டர் ஹண்டரைத் தலைமையாக நியமித்து ஏற்படுத்திய கமிட்டியின் ரிப்போர்ட்டு வெளியாகிவிட்டது. இக்கலகங்களுக்குக் காரணம், மிஸ்டர் காந்தி தொடங்கிய சத்தியாக்கிரஹ இயக்கமே யென்று அக்கமிட்டியின் எல்லா அங்கத்தினர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆயுதந்தரித்திராத ஒரு ஜனக்கூட்டத்தின்மேல் சுமார் 10 நிமிஷம் வரையில் துப்பாக்கியைப் பிரயோகித்து, சுமார் 309 பேர் உயிர்துறக்கவும், ஆயிரம்பேர் காயப்படவும் செய்தது அநியாயமென்றும், அதற்குக் காரணமாயிருந்த ஜெனரல் டையரை எல்லோரும் கண்டிக்கின்றனரென்றும் அவ்வறிக்கை கூறுகின்றது. மற்றபடி அக்கலகத்தை அடக்கமுயன்ற ஏனைய உத்தியோகஸ்தர்களைப் பற்றியும், அதற்காக அவர்கள் செய்த காரியங்களைப்பற்றியும் கமிட்டியார் யாதுங் குறைகூறவில்லை. ஆனால், மூன்று இந்திய மெம்பர்கள் ஐரோப்பியர்களின் அபிப்பிராயங்கள் சிலவற்றில் பேதப்பட்டவர்களாய் 60 பக்கங்களடங்கிய தனிக்குறிப்பொன்று எழுதியிருக்கிறார்கள்.

நெசவு மில்.—சேலம் ஜில்லாவைச் சேர்ந்த தர்ம்புரியில் துணி நெய்யும் தொழிற்சாலையொன்று யேற்படுத்த, ஐந்து லட்சம் ரூபாய் முதல் வைத்து ஒரு கம்பெனி சென்ற மாதம் 5-ந் தேதி கோயம்புத்தூரில் பதிவுசெய்யப்பட்டது. கடுதாசி, வஸ்திரம் முதலியவைகளை இயந்திர உதவியால் மிகப் பெருந் தொகையாய் தீவிரத்தில் செய்யுந் திறமையில் பேர்போன ஐரோப்பா தேசத்திலேயே துணியின் விலை அதிகமென்றால் எல்லா வஸ்துக்களுக்கும் பெரும்பான்மை ஐரோப்பாவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இந்தியாவானது இப்பஞ்ச காலத்தில் என் செய்யும்? இந்த நிலைமையில் "தர்மபுரி மில்ஸ் கம்பனி லிமிட்டெட்"டைப் போல் பல கம்பனிகள் ஏற்படுவது தேசாபிவிருத்திக்கு அநுகூலமாகும். துணி மில்லைவிட தற்காலத்தில் கடுதாசி மில் அவசியமெனச் சொல்லலாம். கடுதாசி அகப்படாமல் அச்சாபீஸ் அதிகாரிகளும், பத்திரிகாசிரியர், புத்தகாசிரியர்கள் முதலியோர்களும் பெருங் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

காகிதப் பஞ்சம்.—இங்கிலாந்து பிரான்சு முதலிய ஐரோப்பா தேசங்களிலும் காகிதப் பஞ்சம் ஏற்பட்டு, புஸ்தகங்கள், சமாசாரப் பத்திரிகைகள் முதலிய பிரசுரங்கள் செய்வதற்கு பெருந்தடையாயிருக்கிறதென்ற கூக்குரல் எட்டுகிறது. இங்கிலாந்தில் மாத்திரம் 321 சமாசாரப் பத்திரிகைகளின் சந்தாக்கள் உயர்த்தப்பட்டுவிட்டனவென்று தெரிகிறது. யுத்தத்துக்கு முன்னிருந்த விலை வாசிகள் இனி எக்காலத்திலும் வரப்போகிறதில்லை யென அர்த்த சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். இதுவுமன்றி, அச்சுத்தொழிலாளர்களுக்கும் அதிக சம்பளம் அளிக்கவேண்டுவதாயிருக்கிறது. இந்தியாவின் நிலைமை அதைவிட கேவலமாயிருக்கிறதென்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த நிலைமையிலும் நமது "நல்ல ஆயன்" சந்தாவை உயர்த்தாமல் நிர்வாகஞ் செய்துகொண்டு வருகிறோம். ஆயினும் இவ்வாறு இனிமேலும் நிர்வகிப்பது கூடாத காரியமாயிருப்பதால் வெகு சீக்கிரத்தில் சந்தாவை ஒரு சிறிது உயர்த்த வேண்டியிருக்கிறது. இதனை நமது சந்தாதாரர்கள் ஆலோசித்து உயர்த்தப்படும் சந்தாவைச் செலுத்தி, நம்மை யாதரிப்பார்களென்று நம்புகிறோம்.

ஐயர்லாந்து.—ஐரிஷ்காரர்கள் தங்களுக்கு சுய ஆட்சி வேண்டுமென்று இதுகாறும் கேட்டுவந்ததில் தங்கள் இஷ்டப்படி காரியம் சித்தியாகவில்லை யெனக்கண்டு மூர்க்கங்கொண்டுவிட்டனர்போலும். அவர்களிற் பெரும்பாலோர் குடியாசையே விரும்புகின்

றனர். குடியரசைச் ஸ்தாபித்துவிட்டாற்போல் அக்குடியரசுத் தலைவர்போல் பிரஜைகளுக்கு உத்தரவு பிறப்பித்து வருகிறார்கள். பிரிடிஷ் கவர்ண்மென்டுக்கு வரி செலுத்தக்கூடாதென்று ஜனங்களுக்குக் கற்பித்து வருகிறார்கள். தங்கள் உத்தரவை மீறி நடப்பவர்களை மனம்போனவாறு தண்டித்துவிடுகிறார்கள். தங்களுக்கு வேண்டியதாயிருந்த ஒரு நிலத்தைத் தரும்படி அதன் சொந்தக்காரனைக் கேட்க, அவன் அதைக் கொடேன் என மறுத்தான். அதற்காக அவனை அவர்கள் பலவந்தமாய்ப் பிடித்து, ஒரு பிரேதப்பெட்டியில் அவனை உயிரோடு கிடத்தி, மேல் மூடியைவைத்து ஆணிகளை யெடுத்து ஒவ்வொன்றாய் முடுக்கி மூடி, அவனை உயிரோடே கொல்ல ஆரம்பித்தார்கள். கொடேனென்று ஓரே பிடிவாதமாயிருந்த அவன் கடைசி ஆணியை வைத்துத் திருகும்போது, "சம்மதம் சம்மதம்" எனக்கூக்குரலிடவே, மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்டானென்று சொல்லப்படுகிறது. இவ்விதமான கொடுஞ்செயல்களைக் கண்டித்துந் தெண்டித்தும் அடக்கி, தேசத்தில் அமைதியையும் சமாதானத்தையும் உண்டுபண்ண, பிரிடிஷ் துரைத்தனத்தார் இங்கிலாந்திலிருந்து பெருஞ் சேனைகளை யனுப்பியிருக்கிறார்கள். செங்கோலுக்குமுன் சங்கீதமா? சின்பீனர்களின் ஜம்பம் ஜெயசீலரான பிரிடிஷாரிடத்திற் செல்லுமா?

மேஸ்டன் சிபார்சு.—இந்தியா கவர்ண்மென்டார் சென்ற வருஷங்களில் அடைந்த நஷ்டங்களைப் பரிகரிக்குமாறு, இதர மாகாண கவர்ண்மென்டுகள் இந்தியா கவர்ண்மென்டுக்கு கொடுத்து உதவ வேண்டுமென்று மிஸ்டர் மேஸ்டனால் சிபார்சு செய்யப்பட்ட தொகைகளில், இச்சென்னை மாகாணம் கொடுக்க வேண்டுமென்று குறித்த 348 லட்சம் ரூபாய் மற்ற மாகாணங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைகளைக் காட்டிலும் அதிக பெரிய தொகையென்று பற்பல சங்கங்களும், கூட்டத்தாருங்கூடி அத்தொகையைக் குறைக்கும்படி இந்தியா கவர்ண்மென்டாரை வற்புறுத்துந் தீர்மானஞ் செய்ததுந்தவிர, சென்னைசட்ட நிரூபணசபையினரும் ஒரு கூட்டங்கூடி அவ்வாறு தீர்மானித்து, அத்தீர்மானத்தை, இந்தியா கவர்ண்மென்டுக்கும் இந்தியா செக்கரெட்டெரியாருக்கும் அனுப்பியுள்ளார்கள். தலைமை கவர்ண்மென்டுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அதற்குக் கீழ்ப்பட்ட கவர்ண்மென்டுகள் பரிகரிப்பது ஒருவாறு ஞாயமேயாயினும், மற்றவைகளைவிட ஒரு மாகாணம் அதிகமாய் 348 லட்சமாகிய பெருந்தொகையை ஒரு வருஷத்தில் செலுத்தவேண்டுமென்பதை எவரும் ஞாயமானதாகக் கருதமாட்டார்.

சென்னையில் கத்தோலிக்கருக்குச்சாப்பாட்டு விடுதி ஒன்றில்லாக் குறை பெருங்குறையாயிருந்தது. இந்தக் குறை யிப்போது நிவர்த்திக்கப்பட்டுப்போயிற்றென்று கேள்விப்பட்டு மன ஆறுதல் கொள்ளுகிறோம். இந்த ஜூன்மீ முதல் தேதி கத்தோலிக்கு இந்தியருக்கு சாப்பாட்டு விடுதியொன்று திறக்கப்பட்டது. அதில் சாப்பாட்டுக்கேயன்றி, இருக்கை, படுக்கை, குளிக்கை முதலிய சௌகரியங்களுக்கும் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது மூன்று கோவில்களுக்கு மத்தியில், பிராட்வேயிலுள்ள டிராம்வேயிக்கு மூன்று நிமிஷ நடை தூரத்தில், சென்னை, வட ஜியார்ஜ்டவுன், செண்ட் சாவியர் தெரு, பி. பி. லேன், 19-ம் நெ. கிருகத்தில் பரோபகார சிந்தையுள்ள ஒரு கத்தோலிக்குக் கனவானுடைய ஆதரணையில் ஸ்தாபிக்கப்பட்டு, நிருவாகத் திறமைவாய்ந்த ஒரு மானேஜருடைய மேற்பார்வையில் நடைபெறுகிறது. கல்வி, வியாபாரம், வைத்தியம்முதலிய பல காரணம்பற்றிச் சென்னைக்கு வரும் கத்தோலிக்கு கிறீஸ்துவர்களுக்கு இது ஒரு சந்தோஷமான செய்தியென்பதில் சந்தேகமில்லை. இது நம்மனோரால் பெரிதும் உபயோகிக்கப்பெற்று அபிவிருத்தியடைந்து, கத்தோலிக்கருக்கு ஒரு தாரகமாகவும், கௌரவமாகவும் விளங்க வேண்டுமென்பது எமது கோரிக்கை.

இந்திய கிறீஸ்துவர்களும் புதிய சட்டசபையும்.—புதிய சட்ட சபையில் அந்தந்த வகுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு அபேட்சகர்களாக அநேகர் எற்கெனவே முன்வந்து தங்கள் நாமதேயங்களைப் பத்திரிகைகளுக்கனுப்பி, தங்கள் தொகுதிகளுக் குட்பட்ட வோட்டர்களைத் தங்களுக்கு வோட் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு வருகிறார்கள். ஆனால், இந்திய கிறீஸ்துவர்களுக்குக் குறிக்கப்பட்டுள்ள ஐந்து ஸ்தானங்களுக்கு அபேட்சகராக யா

ரும் முன்வரவில்லையே யென்று "கத்தோலிக்கு வாச்மென்" பத்திரிகை குறை கூறுகிறது. ஆயினும், பின்கண்டுள்ள தொகுதிகளுக்கு அவைகளுக்கு எதிரே குறிக்கப்பட்ட பிரமுகர்கள் அபேட்சகராக நிற்கிறார்களெனத் தெரியவருகிறது:—

தொகுதி.	அபேட்சகர்.
இராமநாதபுரம் திருநெல்வேலி.	(1) தூத்துக்குடி முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் குருசுபர்ணாந்து அவர்கள். (2) விருதுப்பட்டி ராவி பிரதர்ஸ் புரோக்கர் ஸ்ரீமான் ஜே. என். கொரேரா அவர்கள். (3) ஸ்ரீமான் ஜான் சாமுவேல் அவர்கள். (4) ஸ்ரீமான் டானியல் தாமஸ் அவர்கள்.
சேலம், கோயமுத்தூர், நீலகிரி, மலபார் தென் கன்னடம்.	(1) ஸ்ரீமான் இ. சி. மால்கரேஞாஸ் அவர்கள்.
கஞ்சம், விசாகப்பட்டணம் முதலிய வடஜில்லாக்கள்.	(இன்னும் யாரும் முன்வரவில்லை.)
சென்னை யுட்பட கடப்பை கர்நூல் அநந்தப்பூர் முதலிய மத்திய ஜில்லாக்கள்.	(ஷை)
தஞ்சாவூர், திருச்சிநாப்பள்ளி, மதுரை.	(ஷை)

சென்னையுட்பட மத்திய ஜில்லாக்களின் தொகுதிக்கு, சென்னை பச்சையப்பன் கலாசாலை சரித்திர போதகாசிரியராகிய ஸ்ரீமான் எம். இரத்தினசாமி முதலியாரவர்களும், தஞ்சாவூர், திருச்சிநாப்பள்ளி, மதுரை ஜில்லாத் தொகுதிக்கு ஆனரப்ல் டி. அருமைநாதப் பிள்ளையவர்களும் அபேட்சகர்களாக நிற்கப்போகிறார்கள் என வதந்தி யுலாவுகிறது. ஒரு தொகுதிக்கு ஒரே அபேட்சகர் முன்வந்திருக்கையில் அவருக்கு வோட் கொடுக்கிற விஷயத்தில் சிந்தனை வேண்டுவதில்லை. ஒரே தொகுதிக்கு இரண்டு அல்லது அதிக அபேட்சகர்கள் நிற்கும் பட்சத்தில், தயை தாட்சண்யமின்றி தாரதம்மியம் பார்த்தே வோட் கொடுக்கவேண்டுமென்பதை நமது கத்தோலிக்கு வோட்டர்கள் கவனிப்பார்களாக. கத்தோலிக்கரும் புரோடஸ்டாண்டாருமாக ஒரு தொகுதிக்கு அபேட்சகராய் நிற்கும்பட்சத்தில் தாரதம்மியத்தைக் கவனியாமல் கத்தோலிக்கு அபேட்சகருக்கே வோட் கொடுக்கவேண்டுமென்பதை நமது கத்தோலிக்குச் சகோதரருக்குச் சொல்ல வேண்டியதில்லையென நம்புகிறோம். கத்தோலிக்கரில்லாமல், புரொடஸ்டாண்டர் ஒருவரே ஒரு தொகுதிக்கு நிற்கும்போது, கத்தோலிக்கர் அவருக்கு ஓட் கொடுப்பதில் யாதோர் ஆட்சேபனையுங் கிடையாது. இந்தப் பொதுக் குறிப்புகளை நமது நண்பர்கள் கவனத்தில் வைப்பார்களெனக் கோருகிறோம்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

தூத்துக்குடியில் யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு காலஞ்சென்ற ஸ்ரீமான் குரூஸ் கோமஸ் பல்டானோ அவர்களின் கனிஷ்ட புத்திரியும் மதராஸ் வேப்பேரியில் பிரபல வர்த்தகராகிய S. T. பல்டானோ அவர்களின் நேச பத்தினியும் எனது அருமை கொழுந்தியுமாகிய விறிசித்தம்மாள் கோமஸ் ரோச் எனும் செல்வ மாது தனது அருமை பத்தாவையும் இரு மக்களையும் மற்றும் சகோதரர் சகோதரி இனபெந்துக்களையும் பரிதபிக்கவிட்டு சேசு மரி சூசையெனும் திருநாமங்களைப் பக்தியுடன் உச்சரித்து கடந்த 1919ஆ ஜூன்மீ 13உ வெள்ளிக்கிழமை பகல் சரியாய் 3 மணிக்கு தனதாத்துமத்தை திவ்ய கர்த்தரின் திருக்கரங்களில் ஒப்படைத்து மிக அமரிக்கையுடன் பாக்கியமாய் மரித்தனள். இதன் ஆத்தும இளைப்பாற்றிக்காக சேசுவின் திரு இருதயக் கோவிலிலும், அர்ச். பனிமய மாதாக்கோவிலிலும், வேப்பேரி அர்ச். பெலவேந்திரர் ஆலயத்திலும், புதுப்பேட்டை அர்ச். அந்தோனியார் ஆலயத்திலும் நாளதுமூ 12உ *Requiem* பூசை நடக்கும். இதைக் கண்ணுறும் பந்துக்களே! சிநேகிதர்களே!! கிறீஸ்துவ பூமான்களே!!! இந்த ஆத்துமத்தின் நித்திய இளைப்பாற்றிக்காக பிரார்த்தித்துக்கொள்ள தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. I. P.

1—6—20. J. X. FERNANDEZ.

விஷபேதி.

இப்பயங்கரத்திற்குரிய நோயானது திடீரென்று தோன்றி அநேக உயிர்களைக் கொள்ளை கொண்டுபோகின்றன. ஆபத்திற்கிடமான இவ்வியாதிக்கு அமெரிக்கா தேசத்து கீர்த்திபெற்ற டாக்டரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட "அமெரிக்கன் ஒரிஜனல் காலரா மிக்ஷர்" என்னும் ஔஷதம் கையிலிருக்கும்போது அஞ்சுவதேன்? இம்மருந்தை உபயோகித்த ஒரு கேசாவது தவரவில்லை, உண்மை. விசேஷமாக இராக்காலங்களில் தோன்றுகிறபடியினால் கையிலிருக்கவேண்டியது அவசியம். ஏஜெண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். விலை புட்டி ஒன்றுக்கு ரூ 1—0—0.

எஸ். வீ. முரால் அண்டு கோ.,
149, பிராட்வே, மதராஸ்.

தேம்பாவணி = = = கீர்த்தனை

2-ம் பாகம்.

இது தஞ்சை சமஸ்தானம் மகா வித்துவானும் பாசமய குஞ்சரபஞ்சானன சோடசாவதான அருளப்ப முதலியாரவர்களால் எழுதப்பட்டது. விலை தபாற்செலவோடு ரூ 1—6—0.

காவலன் விடுதூது ... ,, 0—6—0.

சைவமகத்துவ திமிரபாநு விவிலிய விரோததிக்காரம்.

இந்நூல் வெகு சமத்காரமான தர்க்க நீதியில் பெயர்பெற்றதும் விசேஷ ஞானத்தைத் தரக்கூடியதுமான ஓர் ஜீவ பொக்கிஷமேயாகும். இதுவும் மேற்படி சோடசாவதானியாரவர்களால் எழுதப்பட்டது. விலை வி. பி. பி. தபால் செலவுடன் ரூ 2—4—0.

உரிமைச்செல்வத்தை இழந்த ஊதாரிப்பிள்ளை டிராமா.

நாடக நவரசங்களும் பொருந்தியது. நல்ல புத்தி போதனைகளையும், நீதி கருத்துகளையும் புகட்டக்கூடியது. சுகமான இராக தாளங்களுடன் இனிமையான செந்தமிழ் பாடல்கள் அமைத்து படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை வி. பி. தபால் செலவுடன் ரூ 1.

எ. எப். சைமன்,
கமிஷன் ஏஜண்ட்,
மஹா விகடதூதன் ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

இப்பொழுதுதான் புதிதாய் துவக்கப்பட்ட

அதிர்ஷ்ட சீட்டு.

இது செங்கல்பட்டு அர்ச். சூசையப்பர் மடத்து அநாதை பிள்ளைகளுக்காகவும் கவலாங் மடத்து அநாதை பிள்ளைகளுக்காகவும் செங்கல்பட்டில் இவ்வருஷம் ஆகஸ்ட்மூ 25-ந் தேதி துவக்கப்படும்.

100 பிரைஸ்கள்.

முதல் பிரைஸ் ரூ 500.

நம்முடைய தென் பர்கத்து ஏழைப்பிள்ளைகளுக்கு நாம் உதவி செய்யவேண்டியது அவசியம். தர்ம பலனில் பங்கோடு அதிர்ஷ்டமுள்ளவர்கள் நல்ல லாபமும் அடைவார்கள். டிக்கட் ஒன்று அணா நாலுதான். வேண்டியவர்கள் உடனே எழுதுங்கள்.

22 டிக்கட்டுள்ள புஸ்தகம் ஒன்று விற்றால் 2 *Free* டிக்கட்டும், 2 புஸ்தகம் விற்றால் 4 *Free* டிக்கட்டும் ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும். அதிக புஸ்தகம் விற்கிறவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

M. G. S. PILLAI,
Sattur.

மெத்த பிரயோஜனமானது.

இங்கிலீஷ், தமிழ் பாப்புலர் ஒக்கபிளேரி.—இதில் இங்கிலீஷ் சொற்களைத் தமிழ் எழுத்தில் காட்டியும், அதற்கு அர்த்தமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் வாசிக்கத் தெரியாதவர்கள் வெகு சீக்கிரத்தில் தாங்களே படிக்கப் பேசத் தெரிந்துகொள்ளலாம். விலை ரூ 1.

லேடிஸ் கூக்கிரி.—சில பல துரைசானிமார்களுடைய கைபாகமான சமையல் முதலானவைகளை இங்கிலீஷிலும் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ 1.

(தபாற் செலவு பிரத்தியேகம்.)

விலாசம் :— மஹா விகடதூதன் ஆபீஸ், ஜார்ஜ்டவுன், மதராஸ்.